கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
231
சித்திரை 2024
10.04.2024
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-
பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

சி.ரமேஷ்
கந்தர்மடம் அ. அஜந்தன்
ஈழக்கவி
இ.சு.முரளிதரன்
மன்னார் அமுதன்
சு.குணேஸ்வரன்
பரணீ
எஸ்.ஏ,உதயன்
டிலானி
எஸ்.டேவிட்



## எஸ்.ஏ.உதயன் சிறப்பிதழ்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2024 - சித்திரை - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்


**வலி சுமந்த வடுக்கள்**
**எஸ்.ஏ.உதயனின் U.P. 83 நாவலை முன்வைத்து**
சி.ரமேஷ்.......................................... 03

**எஸ்.ஏ.உதயனின் "குண்டு சேர்" பிரதி பற்றி...**
ஈழக்கவி ........................................... 06

**"சொடுதா"**
**துன்பியலின் வாசனை**
இ.சு.முரளிதரன் .................................. 10

**அலுவாக்கரை நாவலை**
**முன்வைத்து**
மன்னார் அமுதன்................................. 13

**ஈழ ஏதிலியர் சுமந்த வலிகளைச் சோல்லும்**
**"தெம்மாடுகள்" நாவல்**
**ஒரு இனத்தின் வாக்குமூலம்**
கந்தர்மடம் அ.அஜந்தன்........ ................. 14

**எஸ்.ஏ.உதயனின் தப்பித்தான்**
மன்னார் அமுதன்................................. 17

**வாசாப்பு**
சு.குணேஸ்வரன் ................................ 18

**உதயன் மண்பற்று மிக்கக்**
**காத்திரமான - படைப்பாளி**
எஸ்.டேவிட்........................ ................. 27

**எஸ்.ஏ. உதயனின் "சங்கு முள்ளு"**
**நாவல் ஒரு பார்வை..**
டிலானி................................................. 29




## சிறுகதை


எஸ்.ஏ.உதயன் - 12, 25,31




## நேர்காணல்


எஸ்.ஏ.உதயன் - 19





## கடிதம்

# ஜீவநதி

**2024 சித்திரை இதழ் - 231**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



**ஜீவநதி**

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## ஈழத்தின் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவர்

ஈழத்தில் இன்றைய நிலையில் நாவல்களை எழுதுபவர்கள் மிக அருந்தலாகவே காணப்படுகின்றது. இந்நிலைமையில் தொடர்ச்சியாக நாவல்களை எழுதி வரும் எஸ்.ஏ. உதயன் கொண்டாட்டத்திற்குரிய படைப்பாளியாக திகழ்கின்றார் ஆசிரியராக கடமையாற்றும் உதயன் அவர்கள் ஈழ அரசியலை நன்கறிந்தவர். போராட்டத்துடன் நெருங்கிய தொடர்புடையவ ராக விளங்கியவர். கூத்துக்கலை தொடர்பான பல பயிற்சிகளை இந்தியாவில் பெற்றுக் கொண்டவர். மன்னார் பிரதேசத்தின் கூத்துக்களில் நன்கு பரிச்சயமான கலைஞராக விளங்குபவர். இவருடைய வாசாப்பு என்னும் நாவல் கூத்துக் கலையுடன் தொடர்புடைய அருமையான நாவலாக திகழ்கின்றது. அது போலவே கப்பித்தான் நாவல் கூட கூத்துக்கலையுடன் நெருங்கிய தொடர்புடைய நாவலாக காணப்படுகின்றது.

மன்னார் பிரதேசத்து மக்களது வாழ்வியலை இவரது படைப்புக்களில் இயல்பாகக் கண்டு கொள்ள முடியும். இவருடைய காட்சி விபரிப்புகள் தனித்துவமானவை. மேலும் இவரது நாவல்களில் ஆவணப் படுத்தப்பட வேண்டிய பல அம்சங்கள் ஆங்காங்கே தென்படுவதுமுண்டு.

இவரது நாவல்கள் பல்வேறு விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. மிக அமைதியாக இருந்து கொண்டு நாவல்களைப் படைத்து வருகின்றார். அனேகமான இவரது 8 நாவல்களும் ஈழத்து விமர்சகர்களால் பேசப்பட்டு வருபவை.

இவருடைய சிறுகதைகளும் தனித்துவமான தன்மையுடையன. மக்களுக்கு தேவையான விடயங்களை தன் சிறுகதைகள் ஊடாகச் சொல்லி வருகின்றார். கவிதைகளையும் அவ்வப்போது எழுதி வருகின்ற இவர் மிக அமைதியான செயற்பாட்டாளர்.

தொடர்ச்சியாக நல்ல நாவல்களைப் படைத்து வரும் எஸ்.ஏ உதயன் அவர்களது இலக்கியப் பணியை கௌரவிக்கும் முகமாக ஜீவநதி அவரது சிறப்பிதழை வெளியிட்டு பெருமையடைகின்றது. மேலும் அவர் பல நாவல்களை எழுத வேண்டும் என அவரை வாழ்த்துகின்றோம்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா

| | |
|---|---|
| 4. அ.யேசுராசா | 5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி |
| 6. மு.யாழவன்- திருகோணமலை, | 7. கந்தர்மடம் அ.அஜந்தன் |
| 8. சி.ரமேஷ் | 9. நா.நவராஜ் |

சி.ரமேஷ்

# வலி சுமந்த வடுக்கள்

## எஸ்.ஏ.உதயனின் U.P. 83 நாவலை முன்வைத்து

ஈழப்போராட்டம் தீவிரம் அடைந்த காலப் பகுதியில் மக்களின் வலிகளையும் ஆழ் துயரினையும் காவி இலக்கியங்கள் எழத் தொடங்கின. குறிப்பாக மக்களின் வாழ்க்கை அனுபவங்களை இலக்கியங் களாகப் படைக்கும் நிலை ஏற்பட்டது. தமிழில் எழுந்த தன் வரலாற்றுப் புனைவுகள் ஆழமும் விசாலமும் கொண்டவை. கோவிந்தனின் புதியதோர் உலகம், ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியங்கள் முதலான தன் வரலாற்றுப் புனைவுகள் தனிமனித அனுபவங்களைத் தமிழ் ஈழ வரலாற்றுடன் இணைத்துக் கூறும் நூல்கள் ஆகும். தன் வரலாற்று நூல்களுக்கு ஈழப்போராட்டம் தனித்துவமான அடையாளத்தை வழங்கியது. போராட்டத்தின் சாதக, பாதகநிலைகளை உணர்த்தி நின்ற இந்நாவல்கள் போராட்டத்தின் வழி மாறிச் சென்ற பாதைகளையும் தெட்டத் தெளிவாக உணர்த்தி நின்றன. ஈழவிடுதலைப் போராட்டத்தின் நேரடிச் சாட்சியங் களாக விளங்கும் இந்நூல்கள் போராட்டம் குறித்து கசப் புணர்வையும் பாசாங்கின்றி வெறுப்பின்றி வெளிப்படுத்தி நின்றன. அவ்வகையில் சொந்த வாழ்விலும் அவதானிப்பிலும் பெற்றுக் கொண்ட விடுதலைப் போராட்டம் சார்ந்த அனுபவங்களை நுட்பமாகவும் செய்நேர்த்தியுடனும் எமக்குத் தரும் நூலே UP *83*. போரையும் அது தந்த வலியையும் மக்கள் எதிர்கொண்ட இடர்பாடுகளையும் படைப்பாளிகள் இலக்கியமாகப் படைத்த சூழலில் அதிலிருந்து விலகி போராட்டப் பாதையில் அதன் பங்காளிகளாகச் செயற்பட்டவர் களின் வாழ்வில் நிகழ்ந்தேறிய சம்பவங்களைப் பிற் புலமாகக் கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தன் சுயநலனுக்காக ஈழப் போராட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்ட இந்தியாவின் இரட்டை முகத்தை இந்நாவலில் பேசும் உதயணன், இந்தியா வால் ஈழப்போராளிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதப் பயிற்சி தொடர்பாகவும் பேசுகிறார். இலக்கிய வரலாற்றில் ஆயுதப் பயிற்சி குறித்துப் பேசிய முதல் நாவல் என்ற வகையிலும் ஈழப்போராட்டம் குறித்து இந்தியாவின் உண்மையான நிலைப்பாட்டை உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டிய நாவல் என்ற வகையிலும் U.P *83* முதன்மையானது.

ஈழத்து அன்னையின் மடியில் வாழ்ந்த தவப்புதல்வர்கள் போராட்டத்தில் எவ்வாறு இணைந்து



கொண்டார்கள் அவர்கள் பயிற்சி முகாங்களில் எவ்வாறான இடர்களை எதிர் கொண்டனர் என்பதை U.P *83* மற்றும் குணா கவியழகனின் நஞ்சுண்டகாடு முதலான நாவல்கள் விளக்கி நிற்கின்றன. ஆனால் இவ்விரு நாவல் களிலும் சித்திரிக்கப்படும் களங்களும் பயிற்சிகளும் வெவ்வேறானவை. நஞ்சுண்டகாடு விடுதலைப் புலி களால் வன்னியில் போராளிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆயுதப்பயிற்சியைக் கூற எஸ்.ஏ.உதயனின் 'U.P 83' நாவலோ உத்தரப்பிரதேசத்தில் இந்திய இராணுவத்தால் போராளிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதப்பயிற்சியைக் கூறுகிறது. இவ்விருநாவல்களிலும் பயிற்சி முகாங்களில் போராளிகள் எதிர்கொண்ட அனுபவங்களும் அவர்கள் பெற்றுக் கொண்ட தண்டனைகளும் வெவ்வேறானவை. போலித்தனமும் பாசாங்கும் நிறைந்த இவ்வுலகத்தின் இயங்கு தன்மையையும் வாழ்வின் இருண்ட பக்கங் களையும் விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்காகப் போராளிகள் எதிர்கொண்ட பெருந்துயரையும் இவ்விரு நாவல்களும் காவி வருகின்றன.

உண்மையான நோக்குக்காக விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட ஒருவன், பயிற்சிக் களத்தில் தான் சந்தித்த சங்கடங்களையும் எதிர் கொண்ட இன்னல்களையும் மீட்டுப் பார்ப்பதே நாவலின் நோக்காகும். உதயனுக்கும் தேவாவுக்கும் இருந்த நட்பு ஆழமானது. தேவாவின் வாழ்வின் பரியந்தம் வரைக்கும் அந்த நட்பு தொடர்ந்தது. நாவலின் தொடக்கப்புள்ளி

எழுத்தாளர் எஸ்.ஏ.உதயனுக்கும் தேவாவுக் கும் இடையிலான உரையாடலே நாவலின் தொடக்கப் புள்ளி. நந்தினி சேவியரின் உரையாடல் வாயிலாக சுந்தர் என அழைக்கப்படும் கி.பி.அரவிந்தனின் இறப்பை அறிந்த தேவா அதனைக் கதை சொல்லியோடு பகிரும் போது நாவல் தொடங்குகிறது. எந்நேரமும் ஓய் வொழிச்சல் இன்றி சுறுசுறுப்போடு இயங்கிய மனிதர், இலக்கியப் பரப்பில் தனக்கென ஒரு இடத்தை நிரந்தர மாக உருவாக்கிய ஒரு மனிதர் இறந்து போன செய்தியை நாவல் எடுத்துரைக்கிறது. கி.பி. அரவிந்தனுக்கும் தனக்கும் இருந்த தொடர்பினை ஆழ்ந்த நினைவுகளுக் கூடாக அசைபோடும் கதை சொல்லி ஈழப்போராட்டத் தில் தனக்கும் அரவிந்தனும் இருந்த ஆழமான உறவை நினைவுகூர்கிறார். தமிழ்நாட்டு கரையோரப்பிரதேச மொன்றில் சுந்தர் மூத்த தோழராக அறிமுகமாகிறார். போராடவேண்டும் என்ற எண்ணங்கொண்ட கதை சொல்லியை ஆசுவாசப்படுத்தி நெறிப்படுத்தும் ஒருவரா கச் சுந்தர் காணப்படுகிறார். அடி, உதை, சிறைவாசம் எனப் பலதை அனுபவித்தவர் சுந்தர். பல்வேறு நெருக்கடியான தருணங்களை நேரடியாக எதிர் கொண்டவர். கதைசொல்லியைப் போலவே கலை இலக்கியத்தில் ஆர்வங்கொண்டவர். இவ்விருவரின் போராட்ட வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு எழுதப் பட்ட நாவலே 'U.P 83'ஆகும். ஆதவன் தீட்சண்யாவின் பாஷையில் கூறினால் “இரண்டு தனிமனிதர்களின் கதை ஒரு இனத்தின் கதையாக வியாபகம் பெறுகிறது”. அக்கதை ஈழப்போராட்டத்தின் கதையாகவும் விடு தலைக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த வீரர்களின் கதையாகவும் காணப்படுகிறது. ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈரோஸ் இயக்கத்தின் நிலைப் பாட்டையும் அதன் செயற்பாட்டையும் இந்நாவல் கூறிச்செல்கிறது. பேசாலை பகுதியில் மையம் கொள்ளும் இந்நாவல் படிப்படியாக நாடு கடந்து இந்தியாவைக் களமாகக் கொண்டு இயங்குகிறது. பேசாலையில் இருந்து கள்ளத்தோணி வழியாகத் தமிழகத்தின் தனுஸ்கோடியில் வந்திறங்கும் விக்டர், ராஜா, ஓசேப்பு, கதைசொல்லி உட்பட ஏழு போராளி களை விடுதலை இயக்கங்கள் எவ்வாறு கடத்திக் கொண்டு சென்று தம்முடைய இயக்கத்தில் இணைந்து கொள்ள இருந்தன குறித்த செய்திகளையும் நாவல் கூறிச்செல்கிறது.

குறிப்பிட்ட காலகட்டத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட 'U.P 83' தேசமொன்றின் வரலாற்றுச் சம்பவங்களையும் உணர்த்தி நிற்கிறது. தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தில் 1983 முக்கியமான காலகட்டம் ஆகும். எண்பத்து மூன்று காலகட்டத்தில்தான் ஈழத்தமிழர்கள் தென்னிலங்கையில் இருந்த தம் ஊரினை இழந்து, உடமைகளை இழந்து, உறவுகளை இழந்து வீதிக்கு வந்தனர். தென்பகுதியில் இருந்து தூர எறியப்பட்ட மக்களின் துயரைக் கண்ணுற்ற ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் இயக்கங்களில் இணைந்து கொண்டனர். வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் வந்து இணைந்த போராளிகளோடு மலையகப் போராளிகளும் புலம்பெயர் மண்ணில் இருந்து வந்த போராளிகளும் இணைந்து கொண்டனர். இனஒடுக்குமுறையால் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காலகட்டத்தில்தான் ஈழ மக்களின் வாழ்வுக்காகப் போராளியாகக் கதை சொல்லி தன்னை இணைத்துக் கொள்கிறார். இச்சம்பவங்களே நாவலின் கதைக் களமாகவும் விரிகிறது.


நாவலில் உத்தரப்பிரதேசத்தின் பயிற்சிக்களம் சித்திரிக்கப்படுகிறது. இதன் landscape மற்றும் போராளிகள் தங்குகின்ற பெரக்சுகள் கதாபாத்திரங் களின் உணர்வுகளுக்கூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. ஆலங்கட்டி மழை பெய்யும் குளிர்நிறைந்த பிரதேசம் கதைசொல்லியின் நினைவுகளுக்கூடாக மீட்டப்படு கிறது. மலையின் அமைப்புக்கேற்றாற் போல் பெரக்சுகள் யாவுமே ஒரே மாதிரியான அமைப்புடையதாகக் காணப்பட்டதையும் நாவல் சித்திரிக்கிறது. நூறு அடி நீளமும் ஐம்பதடி அகலுமாக கூரை பதித்துக் கட்டப் பட்டதாக அந்த பெரக்சுகள் விளங்கின. பயிற்சி நேரங்கள் குழுவுக்கு குழு வெவ்வேறு நேரங்களாக அமைந்தாலும் சாப்பாட்டு நேரத்திலும் தேநீர் பருகும் நேரத்திலும் யாவரும் ஒன்று சேர்க்கின்ற இடமாகப் பெரக்சுகள் காணப்பட்டதையும் சம்பவங்களின் வாயிலாக கதைசொல்லி நினைவுபடுத்துகிறார்.

ஓட்டப்பயிற்சி, உடற்பயிற்சி என விரியும் பயற்சிகள் போராளிகள் மக்களுக்காகவும் மலரப்போகும் தமிழ் ஈழத்துக்காகவும் பட்ட ஆறாத்துயரினை எடுத் துரைக்கிறது. எஸ்.எம்.ஜியை ஐந்து நிமிடத்தில் கழட்டிப் பூட்டுவதுதான் பயிற்சிகளில் மிகக் கடினமான பயிற்சி யாகக் காணப்பட்டதைக் கூறும் கதைசொல்லி மலையின் எல்லைப் புறங்களை நோக்கி ஆறு பதினைஞ்சுக்கு தொடங்கும் ஓட்டப் பயிற்சி குறித்தும் நாவலில் குறிப்பிடுகிறார். பயிற்சியின் பின் வழங்கப்படும் உணவு வகைகளும் அவ்வுணவுகளைப் பகிர்ந்து உண்ணும் போது ஏற்பட்ட தோழமையையும் இந்நாவல் மனிதாபி மானத்தோடு கூறி நிற்கிறது. பயிற்சிகளை ஒருங்காகச் செய்யாதவருக்குரிய தண்டனைகளையும் நாவல் விபரித்துச் செல்கிறது. தமிழ்மணி என்னும் இந்திய இராணுவத் தமிழன், போராளிகளுக்கு வழங்கும் தண்டனைகளின் குரூரத்தை தேவகுமாருக்கு வழங்கிய தண்டனையின் வாயிலாகவும் அவரை அக்கொடுரத் தண்டனையில் இருந்து காபாற்றப் போன விக்கிக்கு வழங்கப்பட்ட தண்டனையின் ஊடாகவும் நாம் காண லாம். பிறிதொரு இந்தியவீரன் திருமலை போராளி களைத் தன் காம இச்சைக்குப் பயன்படுத்திக் கொண்டதையும் இந்நாவல் கூறிச் செல்கிறது. பயிற்சி நேரத்தில் இந்திய இராணுவம் ஈவுஇரக்கமின்றித் தமிழ்ப் போராளிகளைத் தமது சுயநலத்துக்காக வதைத்ததையும் ஆசிரியர் பதிவு செய்கிறார். கடுங்குளிர் காலத்தில் கொடுக்கப்படும் பயிற்சியால் விளையும் விளைவுகளை மோகன் என்ற பாத்திரத்தினூடாக ஆசிரியர் பேசுகிறார். மூலத்தால் இரத்தம் கடுமையாகக் கசியும் சந்தர்ப்பத்தில் கூட அவனைச் சிகிச்சைக்கு அனுப்பமுடியாது என

நிர்வாகம் கைவிரித்த சமயத்தில் போராளிகள் அனைவரும் ஒன்றிணைந்து போராடி மோகனை சிகிச்சைக்கு அனுப்புவதும் போராடிய போராளிகளை இராணுவம் அச்சுறுத்துவதும் நாவலில் இயல்பாகவே வந்து செல்கிறது. சிறிதளவுகூட கிஞ்சிதமின்றி போராளிகளை வதைப்பதன் சூத்திரகாரியாக இந்திராகாந்தி செயற்பட்டதையும் நாவல் விளக்கி நிற்கிறது. பாகிஸ்தானிடம் இருந்து பங்களாதேஸினைப் பிரிக்க இந்தியா கையாண்ட அதே கபடநாடகத்தைத் தான் இலங்கைப் பிரச்சினையிலும் இந்தியா கையாண்டதை ஆதாரங்களுடன் இந்நாவல் எடுத்துரைக்கிறது. இலங்கையின் திருகோணமலைக் கடலில் நிலைகொள்வதும் ஆசியப் பிராந்தியத்தில் தன் வல்லரசை நிறுவதுமே இந்தியாவின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்ததை நாவல் வலியுறுத்துகிறது. பிரித்தாளும் தந்திரத்தைப் போராளிகளுக்கிடையே இந்தியா கையாண்டதையும் இந்நாவல் எமக்கு கூறிச் செல்கிறது. இந்திய அரசு ஈழப் புரட்சி அமைப்புக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் பயிற்சிகளை இந்தியரசு தனித்தனியாகக் கொடுத்தமைக்கு காரணம் பிரித்தாளும் இந்தியாவின் தந்திரம் என்பதை இந்நாவல் திட்டவட்டமாக கூறிச்செல்கிறது. இந்தியா போராளிகளைப் பிரித்தாளுவதற்கு இயக்க அமைப்புக்குள் ஒற்றுமையின்மையே காரணம் என்பதையும் இந் நாவலில் உதயன் குறிப்பிட்டுக் காட்டுகிறார். போராளிகளுக்கு பயிற்சி அளித்த இந்தியா தன்னிடம் பயிற்சிக்கு வந்த அனைத்து உறுப்பினர்களின் விபரத்தையும் பதிவு செய்து வைத்திருந்தன் அடிப்படை நோக்கத்தை நாவல் காரண, காரியங்களுடன் ஆராய்கிறது.

ஆரம்பகாலத்தில் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களில் இடதுசாரி அரசியலை முன்னெடுத்த ஈரோஸ் அமைப்பின் கொள்கைப் பிரகடனங்களையும் நாவல் எடுத்துரைக்கிறது. பாட்டாளி வர்க்கச் சிந்தனையை மக்களிடம் விதைக்கவேண்டும் என வாசன் தோழர் கதை சொல்லியிடம் கூறுவதும் கதைசொல்லி அது இலங்கையில் சாத்தியமில்லை எனக் கூறும் விவாதங்களும் நாவலின் சுவாரசியமான பகுதிகள் ஆகும்.

ஈரோஸ் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் குறித்தும் நாவல் பேசிச் செல்கிறது. ரத்னா என அழைக்கப்படும் இரத்தினசபாபதி கடவுளுக்கு இணையாக நாவலில் போற்றப்படுகிறார். விடுதலை இயக்கத்தினை விஸ்தரிப்புக்கு காரணமான இரத்தினசபாபதி போராட்டத்துக்கு புலம்பெயர்த் தமிழர்களை ஒன்று திரட்டியதை நாவல் போகிற போக்கில் கூறிச் செல்கிறது. பூர்ஸ்வா, ஆயுத முகவர் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் எந்திரன் ராஜியின் உண்மையான முகத்தை நாவல் வெளியுலகுக்குக் காட்சிப்படுத்துகிறது. இந்தியரின் முகவராக அவர் செயற்படுவதை இந்நாவல் கூறிச் செல்கிறது. போராளிகள் மத்தியில் அவருக்கு நல்ல பெயரில்லாததையும் நாவல் சித்திரித்துச் செல்கிறது. மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் பாத்திரங்கள் பலவற்றை உதயன் உருவாக்கியுள்ளார். குறிப்பாக பேசாலையில் இருந்து தனுஸ்கோடிக்கு கடத்தல் பொருட்களை ஏற்றி இறக்க தோணி ஓட்டிய பபா, பின்னர் இயக்கப் பொடியளை மட்டும் ஏற்றிக்கொள்ளத் தோணி




ஓட்டியதைக் கதைசொல்லியின் நினைவுகளுக் கூடாகவே மீட்டப்படுகிறது.

நாவலில் ஈரோஸின் தலைவராக வருகின்ற தேவகுமார் குறித்த பதிவுகள் பாலகுமார் அவர்களின் நகல் வடிவமாகவே காணப்படுகிறது. கருணை, இரக்கம், முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் மனோவுணர்வு முதலானவை பாலகுமாரனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. இதனை நாவல் விலாவரியாகப் பதிவு செய்கிறது.

ஈழமக்களின் வாழ்வில் நினைவுகூரத்தக்க விடயங்கள் பலவற்றையும் நாவல் பேசுகிறது குறிப்பாக வெட்டுப்புள்ளி. அதிகளவான தமிழ் மக்கள் பல்கலைக் கழகம் செல்வதைத் தடுக்கும் வகையில் இலங்கை அரசு வெட்டுப்புள்ளியை அறிமுகம் செய்தது. அதிகளவான இளைஞர்கள் ஈழப்போராட்டத்தில் இணைந்து கொள்வதற்கும் ஆக்ரோசமாகப் போராடவும் இப்பின்னணியே காரணமாக அமைந்ததை நாவல் கோடிட்டுக் காட்டுகிறது. இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்கு ஆதாரமாக அமைந்த பிறிதொரு சம்பவம் சிங்களக் குடியேற்றத்திட்டங்கள். இலங்கையில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நிகழ்ந்த குடியேற்றத்திட்டங்கள் தமிழ் மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்ததோடு அவர்களுடைய வாழ்வுக்கு குந்தகமாக அமைந்ததையும் நாவல் பேசுகிறது. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைப் பேசும் இந்நாவல் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடி வாக்குமூலமாகவும் அமைகிறது. 1974இல் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறித்தும் இந்நாவல் பேசிச்செல்கிறது. சிங்களவர்களால் தமிழர்கள் எதிர்கொள்ளும் இடர்களைப் பேசும் U.P.83, ஈழத்து அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவற்றைப் பேசும் முக்கியமான நாவலாகும். ஈழத்து அரசியல் வரலாற்றில் தமிழ்மக்களின் அடையாளம், தனித்துவம், அங்கீகாரம் குறித்துப் பேசிய U.P.83, மலையக மக்களின் விடுதலை குறித்தும் ஆழ, அகல எடுத்துரைக்கிறது. அட்சரம் பிசகாமல் அடைகாத்த உத்தரபிரதேச நினைவுகளை வெளிப்படுத்தும் இந்நாவல் ஈழவிடுதலைப் போராட்டத்தின் பிறிதொரு பக்கத்தைத் திறந்து காட்டுகிறது.

எஸ்.ஏ.உதயனின் (ஏ. ஜே. கே. துரம்1964) முதல் சிறுகதைத் தொகுப்பு "குண்டு சேர்" (2012), அவர் பல நாவல்களை (லோமியா, தெம்மாடுகள், வாசாப்பு, சொடுதா, சங்கு முள்ளு, உபி83, அலுவாக்கரை, கப்பித்தான்) ஆக்கியிருக்கிறார். புனைக்கதை புனைவில் அவரது ஆற்றல் கவனக்குவிப்பு கண்டுள்ளது. இலங்கை அரசின் தேசிய சாஹித்திய விருது இவரது மூன்று (சொடுதா 2010, வாசாப்பு 2011, அலுவாக்கரை 2019) நாவல்கள் பெற்றிருக்கின்றன. தேசிய விருதுகள் படைப்பின் தராதரங்களை நிர்ணயிக்க போதுமானவை அல்ல, என்கிறபோதும் ஒரு அவதானிப்புக்காக இங்கு குறிக்கப்பட்டது. "பண்பாட்டின் அடிப்படையில் பெரிதும் கவனத்தைக் குவித்த படைப்புக்களாக எஸ். ஏ. உதயனின் நாவல்கள் அமைகின்றன" என்றெழுதியுள்ளார் சு.குணேஸ்வரன். தமிழ்நாட்டு எல்லிஸ் ட்வுன் கூத்தன் பட்டறையில் நாடக அரங்காற்றுகையில் பட்டயப் படிப்பை நிறைவு செய்திருக்கும் உதயன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நுண்கலைப்பிரிவில் ஆசிரியப் பயிற்சியை நிறைவுசெய்துள்ளார். நாட்டுக்கூத்து, நாடகங்கள் உட்பட எண்பதுகளுக்கும் மேற்பட்ட நிகழ்த்து கலைகளை எழுதி அரங்கேற்றியுள்ளார். பன்முக ஆளுமை கொண்ட உதயனின் "குண்டு சேர்" தொகுப்பில் 15உரைப்படைப்புக்கள் உள்ளன. தன்னுடைய பிரதிகள் பற்றி உதயன் "என்னுரை"யில் எழுதியவற்றை பின்வருமாறு நிரல்படுத்திப் பார்க்கலாம்.

1. வாழ்க்கை வெளியின் கணத்தெறிப்புக்களில் ஏற்படுகின்ற அனுபவங்களே என் சிறுகதைகள்.
2. கதாபாத்திரங்களுக்காக அலைவது என்றில்லாமல் நம்மோடு இடைப்படுகின்ற சாமான்ய மனிதர்களே இக்கதைகளின் நாயகர்கள்.
3. விலக்கிவிட முடியாமல் உதறினாலும், சிதறாமல் வந்து என் பேனாவுக்குள் ஒட்டிக் கொள்ளும் மனிதர்களின் வாழ்க்கைதான் இவை.
4. அதிக பாவனை, பாசாங்கு ரசங்கள் இல்லாமல் வாசகரின் மனதோடு பேச முடியுமா? எனக்குத் தெரிந்த என் நம்பிக்கையூட்டும் தமிழ் மொழியில் அதனைச் சோதனை செய்து பார்க்கிறேன்.

இத்தகைய பரிமாணங்களில் அவரது உரைப்படைப்புகள் கலாரீதியில் உயிர்ப்படைந்துள்ளனவா?

# எஸ்.ஏ.உதயனின் "குண்டு சேர்" பிரதி பற்றி...

ஈழக்கவி



இத்தொகுப்பின் மகுடமாகியுள்ள முதல் கதை "குண்டு சேர்". தலைப்பு பிடித்திருந்ததால் இக்கதையே என் முதல் வாசிப்பாயிற்று. அவன் என்று படர்க்கையில் தொடங்குகின்றார். யார் அவன்? கதைசொல்லி அவனது பெயரை சொல்லவில்லை. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாமில் இடைத்தங்கி... பின் விடுவிக்கப்பட்டு பேசாலையில் தொழிலுக்காக வந்த குடும்பத்தில் இவன்தான் படிக்க இலாயக்கு என்று பேசாலைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டவன். பள்ளி சென்ற நாளிலிருந்து அவனுக்கு ஒரே பிரச்சினையும் போராட்டமும்தான். இதற்கு காரணம் குண்டு சேர்! குண்டு சேர் பற்றிய நினைப்பு அவனில் பின்வருமாறு சுழல்கிறது. "அவரும் அவரிட நடையும்... தொழுக்கு தொழுக்கென்று ஒரு பக்கம் சாய்ஞ்சி சாய்ஞ்சி... சாந்தனைப் போல. மெனிக் பாமில் தன்னோடு எப்போதுமே சாப்பாட்டு வரிசையில் நின்ற சாந்தனின் நினைப்பு... அவனும் இப்படித்தான்... காலில் வெடி விழுந்து அவதிப் பட்டான்.. சரியான வைத்தியமில்லாம காலக் கழட்டிப் பிளாஸ்ரிக் கால் போட்டிருக்கு. அவனை மாதிரி சாய்ஞ்சுதான் குண்டு சேரும், நடக்கிறார். "பாவம்... இவருக்கு ஏன் பாவம் பாக்கணும்.. யெங் காச்சட்டைய உரிஞ்சு குண்டியில எப்பிடி அடிக்கலாம்" சலாத்துக கொண்டவன் பின் பக்கத்தைத் தடவிப் பார்த்தான். வலி இன்னும் மிச்சமிருந்தது. "பள்ளிக் கூடத்துக்கு எதுக்குடா வாறீக.. ஆளையும் கோலத்தையும் பாருந்தா... தலைக்கு எண்ணெய் வைக்காம காய்ஞ்சு பரட்டையாக் கிடக்கு. நாளைக்கு மயிரு வெட்டி மனுசன் மாதி வரல் லாட்டி.." வெருட்டினவர் சும்மா விடயில்ல. சடக்கு சடக்கென்டு ரெண்டு இமுவ பின்னால இழுத்திட்டுத்தான் விட்டார். முன்பும் ஒரு நாள் இப்பிடித்தான் அவனது கொப்பியை வாங்கிப் பார்த்தவர் தூக்கி வீசிப்போட்டார். "ஆறாமாண்டு படிக்கிற புள்ளய்க்கு இன்னும் எழுத்துத் திருத்த மில்ல... ஒரு வரி ஒழுங்கா எழுதியிருக்கா பாரு..." அன்றைக்கும் அடிதான் ஆனால் இன்று அவனது காற்சட்டையைக் கழற்றி ரெண்டு போடு போட்டதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்தக் குண்டு சேரையும் மன்னிக்க முடியவில்லை. அதை மறக்க நினைக்கிற போதெல்லாம் பயலுக பார்த்துச் சிரித்தது காதில் கேட்டுக் கொண்டே இருந்தது."

குண்டு சேர் மீது கொண்ட வெறுப்பு, அச்சம் காரணமான அடுத்த பள்ளிக்குப்போக முடிவெடுத்து, அதிபரை சந்திக்கிறான். அவனது வித்தியாசமான நடத்தை கோலத்தைப்பார்த்து, அவனை உன்னிப்பாக உற்றுநோக்குகின்றார் அதிபர். "வெளீர் வெண்மை முற்றாகத் துறந்து, பழுப்பேறி கசங்கிப் போன சட்டை, கட்டையாய்ப் போய்விட்டதென்று அடிப்பக்கம் உருவி விட்ட நீலம் மறந்து போன காற்சட்டை, அதுவும் பின்பக்கம் தேய்ந்து வெளிறிய இடத்தில் கோடாக வெடித்திருந்தது. தலை முடி வளர்ந்து கன்னக் கதுப்பில் பரவி காதினையும் மறைத்திருந்தது. மணிக்கட்டுக்கையில் சிவப்பாய்க் கட்டின கோயில் நூல் அழுக்கேறி திரண்டு போயிருந்தது. டையுமில்லை, சப்பாத்துமில்லை. முழங்காலுக்கடியில் வட்டமாய் ரணம் காட்டியபடி புண்ணொன்று அது கவனிக்கப்படாமல் இருப்பது தெரிந்தது....




"அப்பா என்ன செய்யுறார்?"

"கரவலைக்கு இழுப்புக்குப் போறாரு."

"அம்மா..."

"அதுக்கு மூளைக் கிறுக்கு . பங்கரில செல்லடிச்சு ஆக்கள் செத்த நேரம் பிரேதத்துக்கு மேலே கிடந்து... பயந்திட்டா."

அதிபர் அவனிடம் கேள்வி கேட்பதை நிறுத்தி விட்டார். அந்த சந்தர்ப்பத்தில் குண்டு சேரும் (அருள் சீலன் மாஸ்ரர்) வருகிறார். அதிபரின் விசாரிப்பு முடிவில் குண்டு சேர் இப்படி சொல்கிறார்: "எனக்குத் தெரியும் சேர், இவன் வெட்ட மாட்டான். அதுதான் இண்டைக்கு ஒரு முடிவோட வந்தன். இவனப் புது மனுசனாக்கிறது, புதுசேட்டும் காற்சட்டையும் தைக்கக் குடுத்திட்டன். இப்ப சலூனுக்கு கூடுட்டிக்கொண்டு போய் முடிவெட்டப் பண்றது. ரையும், சப்பாத்தும் இதில் இருக்கு." அவர் கொண்டு வந்த பையைக் காட்டினார்."

இதுதான் இப்பிரதியின் சாரம். யதார்த்தமான கதை. பல இடங்கள் அருமையாகவும் வந்துள்ளன. அகதி வாழ்வின் ஒரு பக்கம் அருமையாக தீட்டப்பட்டுள்ளது. கதைசொல்லி 1983-ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கலவரமான காலப்பகுதியை அடுத்து தமிழகத்துக்கு இடம்பெயர்ந்து 1986முதல் 1990வரை தமிழக அகதி முகாம்களில் வாழ்ந்திருக்கிறார். எனவே தான் கதையாடல்களில் அகதி வாழ்வின் துயர் தூக்கலாக துலங்கியுள்ளது. அவனின் வாழ்வியல் கோலத்துக்கூடாக கதைசொல்லி இதனை வெளிக்கொணர்ந்துள்ளார். போரின் கொடூரம் அம்மா பாத்திர சித்திரிப்பில் காட்டப்பட்டுள்ளது. முக்கியமாக கதையாடல்களில் பாத்திர வார்ப்பின் கட்டமைப்பு சீராக அமைந்துள்ளது. இதனால் பிரதியின் "உணர்வுமுனைப்பு கூர்மையாக வெளிப்பட்டுள்ளது." கதைசொல்லி தன்னுடைய உரை

படைப்புகள் பற்றி என்னுரையில் எழுதியதற்கு ஏற்ப இப்பிரதி கட்டமைந்துள்ளது. "அதிக பாவனை, பாசாங்கு ரசங்கள் இல்லாமல் வாசகரின் மனதோடு பேச முடியுமா?" கதைசொல்லி எழுப்பிய கேள்விக்கு பதில் இப்பிரதியின் நிமித்தம் முடியும் என்பதாகும். ஆனால் எனக்குத் தெரிந்த என் நம்பிக்கை யூட்டும் தமிழ் மொழியில் அதனைச் சோதனை செய்து பார்க்கிறேன் என்பதில்தான் ஐயங்கள் எழுகின்றன.

கதைசொல்லி தான் அறிந்த பேச்சு மொழியை மிகலாவகமாக கையாண்டுள்ளார். அவர் தெரிந்து வைத்திருக்கின்ற விவரிப்பு மொழியை நேர்த்தியாக கையாளும் வல்லமை கொண்டவராக விளங்குகின்றார். சிறுகதைக்கே உரித்தான தனித்துவ நடை அல்லது தனித்துவமான நடையழகு இவரது பிரதிகளில் துளிர்க்க வில்லை. உதயனின் சிறுகதைகளுக்கு சற்று அழகான நடையும் அவசியமாகிறது. பிரதியின் தொடக்கத்தில் அழகு நடையும் விவரிப்பும் சிறுகதைக்கான உத்வேகத் தோடு உயிர்த்துள்ளது. "இளம் சிவப்பு... கருமையாகி இருட்டுப் போல.... அவன் இமைகளைத் தளர்த்தும் போது திரும்பவும் கறுப்பு... அது இளம் சிவப்பாகி கொஞ்சம் கொஞ்சமாக ஒரு விளையாட்டுப்போல... இன்னும் இமைகளை இறுக்கி மூடினான். அவன் கண்களுக்குள்ளேயே நடந்த அந்த நிறமாற்றம் மனதைத் தடவி விடுவது போலிருந்தது. அவன் வெதும்பும் போதெல்லாம் மல்லாக்கப் படுத்திருந்து உத்தரத்தில் தொங்க விட்டு எரிகிற சம்னி விளக்கைப் பார்த்தபடி கண்ணை இறுக்கி மூடுவதும், அந்த நிற மாற்றத்தை உணருவதுமாக நீண்ட நேரம் கிடப்பான்."

"நிறமாற்றத்தை" ஒரு குறியீடாக அல்லது படிமமாக சொல்ல முயன்றுள்ளார். ஏனெனில் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இப்படி சொல்கிறார். "இரவும் அவனை வெகுநேரம் கண்ணுக்குள்ளேயே நின்று அலைக் கழித்த கறுப்பு நிறத்தை நினைத்துக் கொண்டான். அனிச்சையாக இப்போது கண்களை மூடி... இமைகளை இறுக்கிப் பார்த்தான். திரும்பவும் சிவப்பு... கருஞ்சிவப்பு, அதன் பின்னால் ஒட்டிக் கொண்டே கறுப்பும் வர... அது வேண்டாமே என்று சட்டெனக் கண்களை விழித்துக்கொண்டான். இரவீலே ஒரு மாதிரி அந்த நிற மாற்றம் பயமுறுத்துவதும், பகலிலே அதுவே ஜாலியாக இருப்பது போல.... எல்லாம் வெளிச்சத்தைப் பொறுத்துத்தான் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. பகலிலே சூரியனும், இரவிலே குப்பி விளக்கும் இமைகளுக்குள் ஓடுகின்ற இரத்தத்தை சிவப்பு, கறுப்பாக ஊடுருவிக் காட்டுகின்றனவோ? அவன் வயசுக்கு இந்த ஆராய்ச்சி தேவை யில்லை என்று பட்டது. ஏனோ தெரியவில்லை அவன் பிரச்சினைக்கும், இந்த நிறமாற்றத்திற்கும் முடிச்சுப் போட்டுப் பார்ப்பது வினோதம் தான்."

சிறுகதையின் இறுதிப்பகுதி பற்றிய தப்பபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இதனை பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு துலக்குகின்றார். "சிறுகதை யில், அதன் இறுதியில் வரும் "திடீர்த் திருப்பம்" ; "எதிர் பாராத முடிவு" என்பது சம்பந்தப்பட்ட சிறுகதைப் பொருளின் / பாத்திரங்களின் இன்னொரு பரிமாணத் தைத் தருவதேயல்லாமல் ஆச்சரியத் திடீர் இறக்குமதி யன்று. அந்தத் திடீர்த் திருப்பம் எம்மைப் பேச்சு மூச்சற்றவர்களாக்கிவிடும். மாப்பாஸானின் பாத்திரங் கள் எம்மை அந்த நிலையிலேதான் வைப்பதுண்டு. அந்தத் திடீர்த் திருப்பத்தில் ஒரு மனித உண்மை பளிச்சிடவேண்டும். இதனாலே தான் சிறுகதையின் கட்டமைப்பில் அதன் இறுதிப்பகுதி முக்கியமானதா கின்றது. இந்தப் படைப்பு முதிர்ச்சி இயந்திர நிலைப்பட வருவதில்லை, அது மனித உணர்வுத் தெளிவினால் வருவது" (*ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் 2000:90*). "குண்டு சேர்" பிரதியின் முடிவு மனித உணர்வுத் தெளிவினால் வந்திருக்கிறது. குண்டு சேர் பாத்திரத்தின் இன்னொரு பரிமாணத்தை முடிவு காட்டிநிற்கிறது. ஆனால் அந்த முடிவு எதிர்பாராதது அல்ல, எதிர் பார்த்தது. இத்தகைய அடிப்படையில் அமைந்த பல சிறுகதைகளைப் படித்திருப்பதால் அந்த அருட்டுணர்வு உண்டாகின்றது. பிரதியை முடிக்கின்ற வரிகள் பின்வருமாறு அமைந்திருக்கின்றன. "அருள்சீலன் மாஸ்ரர் வரவுப் பதிவில் கையெழுத்து வைத்து வீட்டு வெளிக்கிட, அவரின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு விதத் துள்ளலோடு அவன் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் அதிபர். அவருக்கு ஏனோ தெரிய வில்லை குண்டுசேர் கோலியாத் மாதிரியும் அவன் தாவீது மாதிரியும் தெரிய சிரித்துக்கொண்டார்.

யூதர்களின் விலிலியத்தில் சாமுவேல் நூல் குறிப்பிடுகின்ற ராட்சச போர் விரன் கோலியாத். பயங்கர மான அவனை யாரும் நெருங்க முடியாது. ஆனால், ஆடு மேய்க்கின்ற சிறுவனான தாவீது ஒரு கூழாங்கல்லைத் தன் கவணில் வைத்து, வேகமாகச் சுழற்றி கோலி யாத்தின் நெற்றியில் அடித்து அவனைக் கொன்றான். இது நீண்ட தொன்மை கதை. குண்டாக இருக்கின்ற சேர் அதிபருக்கு ராட்சச உருவம் கொண்ட கோலியாத் மாதிரி யும் சிறுவனான தாவீது அவன் மாதிரியும் தெரிய சிரிப்பு வந்திருக்கிறது. சிரிப்பைத்தவிர, இந்த தொன்மை பாத்திரங்கள் இங்கு சொல்லப்பட வேறு காரணங்கள் உள்ளனவா? ஊகிக்க முடியவில்லை. ஆனால் குண்டு சேர் அவனின் காற்சட்டையை உரிஞ்சு குண்டியில் அடித்தது கோலியாத் வன்முறை. பல அகதி முகாமி லிருந்து பள்ளி வருகின்ற பாதிப்பிள்ளைகள் சப்பாத்து போடுவதில்லை. புத்தக பையும் இல்லை. "அப்ப ஏன் குண்டு சேர் எனக்கு அடிக்கணும்" இது அவனை உறுத்துகின்ற கேள்வி! "கோலியாத்" போன்ற குண்டு சேரின் திடீர் மனமாற்றத்திற்கு காரணமென்ன? வன்மம் புரியாமல் ஆரம்பத்திலேயே அதிபரைப்போல தீர விசாரித்து அவனுக்கு உதவியிருக்கலாமே! போரின் கொடூரத்தால் அவதிபடுகின்ற அகதி சிறுவனை இவ்வாறு வன்முறை செய்துவிட்டு உதவுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? இது சிறுகதையின் எதிர்பாராத முடிவிற்கான கதைசொல்லியின் "ஆச்சரியத் திடீர் இறக்குமதி"யா? அல்லது கதைசொல்லியின் பேனைக் குள் ஒட்டிக்கொண்ட யதார்த்தத்தின் பிரதிபலிப்பா?

"அபத்தம்" விதவையின் கதையாடலாக



அமைந்துள்ளது. பெண்ணியம் பேசுகின்ற பிரதியாக இதனை பார்க்க முடியவில்லை. விதவை பெண்ணின் வாழ்வு பற்றிய இத்தகைய கதைகளை ஏற்கனவே படித்த நினைவுகள் சுழல்கின்றன. இருப்பினும் கதை நகர்த்துகின்ற பாங்கு உள்ளத்தைத் தொடுகின்றது.

"இதுக்குத்தான்... சொன்னன்... வீட்டில கிட வெண்டு. போற இடத்தில மரியாதையா இருக்கத் தெரியாதவளுக்கெல்லாம் என்னத்துக்கடி வேலை...."

"அம்மா... வேலை செய்யுற இடத்தில ஆக்களோட கதைக்கிறது பேசுறது இல்லையா."

இந்த உரையாடல் போதும் பிரதியின் பாடு பொருளை புரிய. சாராவை அவளது மேல் அதிகாரி விரும்புகின்றான். அவனும் மனைவியை இழந்தவன். அவனுடன் நெருங்கிப் பழகும் அவளுக்கு அந்த எண்ண மில்லை. ஒருபோது அவன் கேட்கிறான், "சாரா... நாம நமக்காக வாழுறதப் பற்றி யோசிப்போமா?" அதிர்ந்துப் போகின்ற சாரா இரவெல்லாம் யோசித்து ஒரு முடிவுக்கு வருகிறாள். "ஊருலகத்தில் நடக்காதொண்டும் இங்க நடக்கயில்ல. மனசு ஒத்துப்போற ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் வாழ்க்கத் துணையா கடைசிக் காலத்தில இருக்கிறதுக்கு மறுமணம் செய்து கொண்டால் என்ன?" இந்த உந்தலோடு கதை நகர்த்தப் பட்டிருந்தால் இது ஒரு உன்னத உரைபடைப்பாகி யிருக்கும். ஆனால் முடிவு இப்படி ஆகிறது. "எனது மகள் பெரியவளாகி விட்ட படியால் தாய்மைக்குரிய பொறுப்புக் களும் அதிகம் இருப்பதனால்..... அவற்றைச் செய்வ தற்கு விடுமுறை கேட்டு நிற்கின்றேன்." இந்த முடிவும் "ஆச்சரியத் திடீர் இறக்குமதி"தான்! "காணாமல் போனவன், அபத்தம் போன்ற கதைப் பிரதிகள் அதன் பாத்திர வார்ப்பில் முன்-பின் முரண்பாடுகள், அக்கதைப் பிரதிகளின் திடீர் முடிவுகள் போன்றவற்றின் காரணமாக அவை பெண்ணியப் பிரதிகளாக மாறுகின்ற சந்தர்ப்பத்தை இழந்து விடுவதாக..." இத்தொகுப்பின் பின்னுரையில் மேமன் கவி எழுதியிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. உதயனின் எல்லா படைப்புக்களுக்கும் போலவே இப்பிரதிக்கும் பேச்சு மொழி கைகூடி வந்திருக்கிறது. இப்பிரதியில் ஒரு விதவைப் பெண்ணின் மனப்பகுதிகளின் உணர்ச்சிகளையும் மெல்லியதாய் சித்திரிக்க முனைந்திருப்பது சிறப்பானது.

இத்தொகுப்பை முழுமையாய் அவதானிக் கின்றபொழுது உதயன் தனது சிறுகதைகளை, உணர்ச்சி செறிவும் யதார்த்தப் பின்னணியும் கொண்ட உன்னத சித்திரங்களாக வடித்துள்ளார். எளிய ஜீவனுள்ள நடையில் கதையின் கட்டுக்கோப்பு குலை யாமல், தான் கூறவந்ததை முனைப்போடு முன் வைத்துள்ளார். "கதாபாத்திரங்களுக்காக அலைவது என்றில்லாமல் நம்மோடு இடைப்படுகின்ற சாமான்ய மனிர்தகளே இக்கதைகளின் நாயகர்கள்" என்று உதயன் கூறியதற்கு ஒப்ப, மனிதர்கள்பால் அவர் கொண்டுள்ள பரிவும் பாசமும் இயல்பானதாய் போலித்தனமின்றி ஒளிர்கின்றது. அதனால் வாசகனுக்கு அப்பாத்திரங் களுடன் ஒன்றாகப் பயணிக்க முடிகின்றது. குறைவும் நிறைவும் கொண்ட இப்பாத்திர சித்திரிப்பில் மனிதநேயம் அடிநாதமாக ஒலிப்பது சிறப்பாகும். உதயனின் சிறுகதைகள் இன்னும் செதுக்கப்பட வேண்டும். பேராசிரியர் சிவத்தம்பியின் பரிபாஷையில் சொன்னால், "தீட்டித்தீட்டி ஒளிபெறச் செய்யப்படவேண்டியது" அவசியமாகும். படைப்பு மொழியில் (அழகியல்) அவரது கவனம் குவிதல் நன்று. இந்தப் பாணி கதைகளையும் தாண்டி பரீட்சார்த்தமான கதைகளை எழுதும் முயற்சியில் முனைப்போடு அவர் ஈடுபடவேண்டும். எழுத்தார்வமும் எழுத்தாற்றலும் நிரம்பப் பெற்ற உதயனால் அது முடியாத காரியமல்ல. உதயனின் உரைப்படைப்புகளில் கலைநயமும் மேவி மினுக்கமுற்றால் அவை கலாரீதியில் உயிர்ப்படையும் என்பதில் ஐயமில்லை!

இ.சு.முரளிதரன்

# "சொடுதா" துன்பியலின் வாசனை

ஈழத்து இலக்கியத்தின் பன்முகங்கொண்ட படைப்பாளிகளின் வரிசையில் எஸ்.ஏ.உதயனும் ஒருவர். மன்னார் மாவட்டம் பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராகப் பணியாற்றுகிறார். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை போன்றவற்றில் ஈடுபாடுடையவர். நாடகத் துறையில் இயக்குநராக, ஒப்பனையாளராக, தயாரிப்பாளராக விளங்குகின்றார். அனைத்துத் துறைகளிலும் சிறகு விரித்தாலும், நாவலே இவரது அடையாள மையமாக விளங்குகின்றது. ஒரு வாசகனாக அவரை இனங்கண்ட போது, அதிகம் பேசப்பட வேண்டிய நியாயங்களை படைப்பிலே பதிவு செய்தவராக அமைந்திருந்தார். கேளிக்கை தன்மையை உட்சரடாகக் கொண்டிருந்தாலும். தீவிரத்தன்மையை வெளி விம்பமாக நிலை நிறுத்தவதில் கைதேர்ந்தவராகக் காணப்படுகின்றார். கச்சிதமான வடிவத்தினை விட கருத்தியல் நேர்த்தியில் அக்கறை கொண்டவர். புதிய சாத்தியங்களை வெகு நுட்பத்தோடு பதிவு செய்ய முனைபவர். எளிமையின் வசீகரத்தை, மானுடத்தின் சவால்களை மண்வாசனைப் பாங்கோடு படைப்பாக்கி வெற்றி கண்டவர். கதை கூறலில் முதிர்ச்சியினைப் பெற்றவர். மரபின் கூறுகளுக்கும் நவீனத்துவத்தின் கூறுகளுக்குமான மோதுகையில் மரபின் பக்கமான சாய்மானத்தைக் கொண்டவர். எழுத்தாளர் குறித்த இத்தகைய முற்கற்பிதங்கள் அவரோடு பழகிய அனுபவத்தால் விளைந்தனவல்ல. படைப்புகளை வாசித்ததன் தெறிய பெறுமானமாக அமைந்தன. இவற்றினை நடுவண் இழையென முன்னிறுத்தி "சொடுதா" குறித்த எனது தரிசனத்தைப் பதிவு செய்ய விழைகின்றேன்.

"சொடுதா" நாவலானது 2011இல் தலையருவி வெளியீடாக அமைகின்றது. "சொடுதா" என்பது வாலிபமிடுக்கினைக் குறித்து நிற்கிறது.




ஐம்பதுகளில் மன்னார் நெய்தல் நில மக்களின் வாழ்வியலை இனங்காட்டுவதாக நாவல் அமைந்துள்ளது. கயிற்றுவலை நைலோன் வலையாக மாறுகின்ற காலமொன்றில் சம்மாட்டிமாருக்கும் கரைவலை இழுக்கும் தொழிலாளர் களுக்குமான உறவினை வட்டார வழக்குகளோடு வெளிப்படுத்துகின்றது.

நாவலின் மையக் கதாபாத்திரமாக மரியாசு என்ற சம்மாட்டி காணப்படுகின்றான். மரியாசின் தந்தையின் மரணத்தின் பின்னர், மரியாசு சம்மாட்டி ஆகிறான். புதிய சிந்தனையோடு மாற்றங்களை நிகழ்ந்த எண்ணுகிறான். சமூக மாற்றத்திற்கான விதைகளோடு அவனது நகர்வுகள் இடம் பெற்றாலும், காமம் பெருந்தடை யாக அமைகின்றது. காமமே கதையின் இறுதி உச்சத்தினைக் கட்டமைக்கின்றது. தனது குடும்பத்திற்கு விசுவாசமாக உழைக்கின்ற சீமாம்புள்ளயின் பெண் பிள்ளைகளோடு மரியாசு கொள்ளம் உறவு கதையின் போக்கினைப் புரட்டிப் பொட்டு விடுகின்றது. மரிசாசுவின் நேர் - எதிர்ச்சிந்தனைகளின் கூட்டு விளைவை நாவலின் பார்க்க முடியும்.

இந்நாவலுக்கும் பலமாகவும் பலவீனமாகவும் காமம் அமைந்துள்ளது. இயல்பானதாகவும், மகிழ் நெறிக்குரியதாகவும் பேரமைதியைக் கட்டமைப்பதாகவும் அமைந்த காமத்தை நாவலாசிரியர் அணுகிய முறைமை சற்று நெருடலைத் தருகிறது. திரையில்லாத நடப்பியலாகக் காமத்தை இனங்காட்ட விரும்பியமை சிறப்பானது. எனினும் சதைக் கூட்ட உராய்வே காமம் என்ற விம்பத்தை நாவல் கட்டியெழுப்ப எத்தனிக்கிறது. பொதுப்புத்தியோடு சுகந்தமாலையை அணுகியதன் தர்க்கம் ஒவ்வாமையை உண்டாக்குகின்றது. ராசேந்திரனின் கோணத்திலிருந்தும் சுதந்தமாலையை நோக்கி, சற்றே பெண்ணிய சாய்மானத்தோடு வடிவமைத்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக காமம் அமையும் போது, விபத்து என்ற மையப் புள்ளியை விட்டு விலகிவிடும். ஏதேனும் ஒரு புள்ளியில் அணுகியிருக்கலாம் என்பது என நோக்கு. இவ்வாறு தான் அணுக வேண்டுமெனச் சொல்லும் உரிமை எவர்க்கும் கிடையாதென்பதையும் நன்கறிவேன். எனது பார்வையை மட்டுமே பதிவு செய்கிறேன்.

விசுவாசமான தொழிலாளியான சீமாம் புள்ளியின் மூன்று பெண்களையும் நாயகனின் வட்டத்திற்குள் ஏதோ ஒரு வகையில் நாவலாசிரியர் கொண்டு வந்து விட்டார். வயிற்றில் வளரும் சிசுவிற்கு அப்பாவி ஒருவனைக் காரணமாகத் திட்டமிடும் சூழல் சறுக்கிவிட, சுகந்தமாலை தற்கொலை முடிவினைத் தேர்ந்தெடுக்கிறாள். அவள் அவள் மீது அனுதாபம் தோன்றினாலும், அருவெறுப்பும் ஏற்பட்டு விடுகின்றது. உடற்புனிதம் குறித்த மாயையை உடைத்தெறிந்து பழகும் முகழ்நிலைப் பண்பினை இறுதிவரை சுகந்தமாலை பேணவில்லை. காமம் தீமையென உருப்பெற்று விட்டது. மரியாசுவும் கொதித்த இரும்பாய் மாறிக் குளிர் நீர்தெடுகின்றான். அவனிடமும் காமம் இயல்போடு இல்லை. இந்த ஒரு விடயத்தைத் தவிர்த்துவிட்டு நோக்கினால் நாவல் முழுமையும் ஆச்சரியங்களால் நிறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்புப் பொடியள் வெள்ளை றால்




பிடிக்க வருவதும், அதனால் நிகழும் மோதுகையும் சதுரங்க ஆட்டத்திற்கான சுவாரஸ்யத்தோடு நுட்பமான அடுக்குகளால் சொல்லப்பட்டுள்ளன. இறுதிக் கலவரமும் நாயகனிடம் வெளிப்படும் அறமும் கதைக்கு வலுச் சேர்கின்றன. விடுப்பார்வ முடிச்சுகள் அவிழாத சூழலில் ரத்னமாலை புகைவண்டியில் ஏறுகின்ற தருணம் காவியக் கனதியோடு காணப்படுகின்றது. மீனவத் தொழில் சார்ந்த நுணுக்கங்களை வெகு நுட்பமாகப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீமாம்புள்ள என்ற கதாபத்திரத்தின் வடிவமைப்பு அற்புதமாக அமைந்துள்ளது. நடப்பியல் வலிமையோடு அறத்தின் பக்கம் சாய்வதைவிட விசுவாசம் மேலோங்கிய தொழிலாளியின் உளச்சிக்கலை அருமையாக இனங்காட்டுகின்றது. மன்னார் பிரதேசக் கடற்றொழிலாளர் பக்க நியாயங்களை மறுதலித்து விட்டு, நீர்கொழும்பு இளைஞர்களுக்குச் சார்பாக நடந்துகொள்ளும் காவல்துறையின் செயற்பாடும் யதார்த்தத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவன் தொழிலாளர்களுக்கு இலாபத்தில் பங்கு கொடுக்க எண்ணுவது இலட்சிய மனப்பாங்கின் குறியீடாகும். நடப்பியலுக்குப் பொருந்தாதது. எனினும் நாவலாசிரியரின் வேணவா எனக் கொள்ளத்தக்கது. சமூக மாற்றத்தினை அவாவும் பண்பாக அமைகிறது. வட்டார வழக்கோடு உரையாடல் காணப்பட்டாலும், சிற் சில இடங்களில் செயற்கைத் தனமும் துரத்திக் கொண்டு நிற்பதை உணர முடிகின்றது. உவமைகள் தற்புதுமையாக அமைந்துள்ளன. களச் சூழலோடும் பல உவமைகள் பொருந்திப் போகின்றன. “கழுவியும் போகாத கணவாய் மை மாதிரி” “புள்ளப் பெத்தவ புள்ளய்க்குப் பால் கொடுத்து மெலிஞ்ச மாதிரி” என உவமைகள் புதுமையாகக் கையாளப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தமாக நோக்கினால், அற்புதமான அனுபவ அதிர்வுகளைக் கட்டமைக்கும் விதத்திலே “சொடுதா” எழுதப்பட்டுள்ளது. எஸ்.ஏ உதயன் கவனக்குவிப்புக்குரிய படைப்பாளியாக கொண்டாடப்பட்ட வேண்டியவர் என்பதில் ஐயமில்லை!

எஸ்.ஏ.உதயன்

# வாவலும் தாவலும்

படலையடியில மீனோட நிக்கிற பஞ்சனக் கண்டவுடனே படக் கென்டு வீட்டுக் கதவத் திறந்து கின்டு வெளியில வந்தாரு அந் தோணி மாஸ்டர்.

"தம்பி.. உனக்கடா நான் சொல்றது விளங்கிறதில்ல.. அங்க கந்தோரில போய்க் கதைச்சியா.."

பஞ்சன் புருவத்தை உயர்த்தின வன் கையில் இருந்த வாவல் மீனையும் சாடையா உசத்திப்பிடிச்சான்..

"என்னடாப்பா இது.. வாவல் என்ன.."

கண்ணாடி இல்லாமல் அவரிட மோரக்கட்ட என்னவோ மாதிரி இருந்துது.. ஆவென்டபடி.. முகத்தில ஆவல் பரவ.. கொடு வாய்க் குள்ள சிரிச்சாரு மாஸ்டர்.

அவரிட புத்திக்குள்ள இப்ப என்ன ஓடுதென்டு பஞ்சனுக்குத் தெரியுது.

போன கிழமை கும்புலா மீன் கொண்டுவந்து குடுத்தபோது "தம்பி.. நல்ல வாவல் படுதாமடா.. கிடைச்சால் கொண்டுவந்து தாவன்.. ரீச்சருக்கு வாவல் மீனென் டாக் காணும்..." என்டு அவரு சொன்னது ஞாபகத்தில் இருந்த தால தான். இன்டைக்கென்டு பாத்து இதைக் கொண்டு வந்திருக்கான் பஞ்சன்.

"எப்பிடி மீன்பாடு"

"மீன்பாடு சவுத் சேர்.. அண்ணன் வீட்டுக்கு கறிக்கெடுத்து வைச்சிருந்தத.. அவனுக்குத் தெரி யாம எடுத்தின்டு வந்திட்டன்.."

மாஸ்டருக்கு பயல் என்னத் துக்கோ அடி போடுறான் என்டு விளங்கிச்சு.

"ஆங்..நேற்றுக் கந்தோருக் குப் போனாய்.. என்னவாம்"

"அது சேர்.. எல்லாமா அம்பத் தாறு பேருக்குத் தான் இப்ப நியமன மாம்.. ஆளுக்கு முந்தி எல்லாப் பள்ளிக் கூடமும் பேர் குடுத்திட் டாங்க.. நமக்கு ஒரு கோட்டாதானாம்.. அதான்.." பஞ்சன் இழுத்தான்.. அந்த இழுவையில கதை ஒன்டு தொக்கி நிக்குது..

பஞ்சன் அவரிட பள்ளிக் கூடத்துக்குப் போறதுக்கு ஒரு வருசத் துக்கு முந்தியே அந்தோணி மாஸ்ரரிட பள்ளிக்கூடத்தில தொண்டராசிரியரா படிப்பிக்கிறது சுரேஸ்தான்.. கந் தோரில இருந்து கடிதம் வந்தபோது அந்தோணி மாஸ்ரர் பள்ளிக்கூடத்தில தொண்டராசிரியர் என்டு முதல் சுரேசிட பேரையும் ரெண்டாவதாகத் தான் பஞ்சனிட பேரையும் எழுதியிருந் தாரு.. இப்ப ஒருத்தருக்குத்தான் சான்ஸ் என்டபடியால அது சுரேசுக்குத்தான்..

இயக்கத்துக்கென்டுபோய் பிறகு ஒரு வேல வெட்டியில்லாம கடக்கரவழிய திரிஞ்சுகின்டிருந்த சுரேஸ்.. எதுக்கென்டாலும் கெட்டிக்கார னென்டுதான் அந் தோணி மாஸ்டர் தன்னிட பள்ளிக்கூடத்தில படிப்பிக்க அவனக் கூப்பிட்டுச் சேத்தார்.

அந்த நெருக்கடியான நேரத்தில அவரிட பள்ளிக்கூடத்துக்குப் போய் வாறதே பெரும்பாடு.. அடிக்கடி சண்ட.. ஹர்த்தால் என்டாப்போல பஸ்ஸும் ஓடாது.. ஒரு மண்ணும் ஓடாது.. பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டுத் திரும்பி வாறதுக்கு இருட்டுப் பட்டுப் போயிரும்.. அரிக்கேன் லாம்பக் கொளுத்தி தூக்கிப் பிடிச்சுக்கின்டு அஞ்சாறு ரீச்சமார் சேந்து வருவோம்.. ஆமிக்கேம்ப் பரியலக் கடக்கும்போது உயிர் போய்வரும்..

பஞ்சனும் வேலயில்லாமத்திரிஞ்சபோது "பஞ்சன் நீயும் வாவென்டா.." பள்ளிக்கூடத்தில தொண்டராசியரா வேல செய்ய வென்டு கூட்டாளித் தன்மையில கூப்பிட்டது சுரேஸ்தான்.

மூன்று வருசம் கழிச்சு இப்பதான் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் என்ட கதை வந்திருக்கு..

கிடைச்சால் முதல் சுரேசுக்குத்தான்..

பஞ்சன் கையிலிருந்த வாவல் மீனத் தூக்கிப்பிடிச்சான்.. மீன் களிலேயே வாவல் மீனிட ருசிய வேறெந்த மீறும் அடிக்காது.. அதில முள்ளும் ஒரு டேஸ்ற்தான்..

ரீட்டா ரீச்சர் வாசலில் நின்று பாக்கிறாக.. "எப்பிடியும் ரெண்டர ராத்த லெண்டாலும் இருக்கும்.. குழம்புக்கும் சொதிக்கும் போட்டு பொரிக்கிறதுக்கும் காணும்.. ராவைக்கும் வைச்சு சாப்பிடலாம்.."

ரீச்சருக்கு அலப்பு.. வாய் ஊறுது.. டப்பென்டு கிட்ட வந்தாக.

"தம்பி..பஞ்சன் விலைக்கென்டாலும் தந்திற்றுப் போவியா.." பெருச்சாளித்தனமாக் கேட்ட ரீச்சர.. அதட்டுறமாதிச் சொல்றாரு மாஸ்ரர் "வாய மூடிக்கிட்டு சும்மா இருக்கமாட்டீரா.. அவனென்ன யாவாரியா.. இத்தின நாளும் மீன் கொண்டுவந்து தாறான்தான.. காசா கேட்டான்.. தேவையில்லாமக் கதைக்காதேயும்"

"இல்ல..இது வாவல்மீன்தான.. அதான்.."

"வாவலோ.. அருக்குலாவோ பஞ்சன் நம்மட்ட இருந்து காசு எதிர்பாக்கிறதில்ல.. என்னடா தம்பி"

மாஸ்ரர் பஞ்சன நையாண்டித்தனமாப் பாத்தாரு.. அந்த நையாண்டி யில கபடமும் இருந்துது.

"சேர்.. காசென்ன சேல் காசு.. ஆனா.."

"என்னடாப்பா. ஆனா ஆவன்னா சொல்லு.." என்றவர் அனிச்சையாகவே பச்சனிட்ட இருந்த மீனுக்கு கைய நீட்டினாரு..

"சேர்.. எப்பிடியாவது இந்த சான்ஸ எனக்கு எடுத்து தாங்க சேர்"

"எந்தச் சான்ஸ்"

"அதான்.. இந்த நியமனத்தை எனக்கு எடுத்து தாங்க சேர்.."

"பஞ்..ச்..ன்" முகத்தில அதிர்ச்சியோடு வாயின் உள் அண்ணம் தெரியிறமாதி வாயப்பிளந்துகின்டு பாக்கிறாரு.. மாஸ்டர்.

"சேர்..ப்ளீஸ் சேர்.. எனக்கு இந்த சந்தர்ப்பத்த விட்டா.. வேறொண்ணும் கிடைக்காது சேர்.."

"அடே..அது..அது.. சுரேசுக்கடா.. அவன் தானடா.. உனக்கு முந்தி பள்ளிக்கூடத்துக்கு வந்தவன்.. அவனுக்குத்தான் நான் கடிதம் எழுதி வைச்சிருக்கன்."

"இல்ல சேர்.. அவனிட ரிசால்சும் பரவாயில்ல.. இதவிட்டா அவனுக்கு வேற சந்தர்ப்பம் வரும்தானே சேர்"

"அதுக்கு." மாஸ்டரின் முகம் இருட்டியிருந்துது.

"பாவம் சுரேஸ்.."

உதட்டைப் பிதுக்கினவர் திரும்பவும் பஞ்சன் கையில இருந்த மீனப் பாத்தாரு. அவருக்கு மனம் குடைஞ்சுது. "சுரேஸ் கெட்டிக்காரன்.. எதென்டாலும் சரி அவனுக்கு.. ஆனால் அவன் தின்னக் குடிக்க வழியில்லாதவன்.. ஒரு பிரயோசனமு மில்ல.. அவனை விட பஞ்சனுக்கு சைன் பண்ணிக் குடுத்தால் வீட்டில கறி மீனுக்கு பஞ்சமிருக்காது.. என்ன செய்யிறது.."

மாஸ்டர் மனுசியிட முகத்தப்பாக்கிறாரு..

"என்ன செய்யிறது.."

"முதல் இந்த வாவல் மீன வாங்குங்க.." சொன்ன ரீட்டா ரீச்சர் பஞ்சன் கையில் இருந்த மீன வெடுக்கென்டு வாங்கினா.

மீன் வாங்கிக்கிட்டு விறுவிறென்டு குசினிக்குள்ள போற ரீட்டா ரீச்சரையே பாத்துக்கின்டிருந்தாரு மாஸ்ரர்.

"சரிடா பஞ்சன்..வீட்டுக்குள்ள வா..கடிதம் எழுதித்தாறன்.."

பஞ்சன் சிரித்தபடி அந்தோணி மாஸ்ரருக்குப் பின்னால நடந்தான்.

மன்னார் அமுதன்

# அலுவாக்கரை நாவலை முன்வைத்து

ஈழ இலக்கியத்தின் நாவல் உலகில் தவிர்க்க முடியாத ஆளுமை தேசிக்கலைஞர் எஸ்.ஏ. உதயன் அவர்கள். அலுவாக்கரை அவரது ஏழாவது நாவலாகும். இந்தியாவின் பாண்டியமன்னர்களின் வம்சாவளியாக இருந்து புலம்பெயர்ந்து இலங்கையின் தலைமன்னார் கரையை அடைந்தமக்கள் காலப்போக்கில் பல்கிப் பெருகி வாழ்வதை அவரது மற்றுமொரு நாவலான கப்பித்தான் விரிவாகப் பேசுகின்றதை இங்கு சிறப்பாகக் கூறலாம்.

அலவாக்கரை என்பது கடல் அலையும் நிலமும் சந்திக்கும் பகுதி. பேச்சு வழக்கில் அலுவாக் கரை எனப்படுகிறது. எஸ்.ஏ. உதயனின் வேறு சில நாவல்களுக்கு சாகித்யவிருது கிடைக்கப்பெற்றுள்ள தோடு, அலுவாக்கரை எனும் இந்நாவல் கொடகெ விருதினைப் பெற்று கொடகெ வெளியீடாகவே பிரசுரம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மன்னாரின் மீனவக் கிராமங்களில் பேசாலை யும் முக்கியமான ஒரு ஊராகும். இவர் எழுதிய பிற நாவல்களான லோமியா, சொடுதா, தெம்மாடுகள், வாசாப்பு போன்ற நாவல்களின் தனித்துவமான தன்மை யான வட்டார வழக்குச் சொற்கள் இந்நாவலிலும் இடம் பெற்றுளன. ஆழமான சமூகப்பார்வை, வித்தியாசமான கதைக்கலங்கள், கதாபாத்திரங்களின் உருவாக்கம் மண்வாசனை வீசும் தமிழ்நடை போன்ற காரணிகலின் திரட்சியினால் உயர்விருதுகளைம் பல்வேறு பரிசுகளை யும் எஸ்.ஏ. உதயனின் நாவல்கள் பெறுகின்றன என அணிந்துரையில் குறிப்பிடுகிறார் எழுத்தாளரும் ஆய்வாளருமான திரு.டேவிட்.

அலுவாக்கரை 70களில் வாழ்ந்த மீனவர் சமூகத்தின் வாழ்வியலை முன்வைத்து இந்நாவலைத் தந்துள்ளார். அப்பிரச்சினைகள் 50 வருடங்கள் கழிந்த நிலையிலும் பிரச்சினைகளாகவே உள்ளன என்பது தான் மிகப்பெரிய வேதனை.

பாக் ஜலசந்தியின் கிழக்குக் கடலில் உற்பத்தி யாகும் இறால் , மீன், கணவாய் போன்ற மீன் வளங்களை உடமையாக்கிக் கொள்ளுவதில் மன்னார் மீனவர்கள், குறிப்பாக பேசாலை மீனவர்கள் எதிர்கொளும் பிரச் சினைகள் சவால்கள், நெருக்கடிகள், உயிராபத்துகள், ஏமாற்றங்கள், வர்க்கமுரன்பாடுகள், தனிமனித அபிலா சைகள், தொழில்முறை மாற்றங்களால் சமுதாயத் தளத்தில் ஊடுருவியுள்ள தவிர்க்க முடியாத தொழிநுட்ப மாற்றங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை ஆழமாகவும், தர்க்கபூர்வமாகவும் யதார்த்தமாகவும் வெளிக்கொணரும் கனதியான நாவலாக அலுவாக் கரையை நிதானமாக வாசிக்கும் நெஞ்சங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

பாரம்பரிய மீன்பிடி முறைகளுக்குப்பின் வந்த பெருங்கலமான ட்ரோலர் தொழில் முறை மிகப்பெரிய அளவில் இறால்களை அள்ளி எடுக்க ஏதுவாய் இருந்ததுடன் கடல்வளத்தை முற்றிலுமாக அழிக்கக் கூடிய ஒன்றாகவும் இருந்தது. இந்நாவலில் முதற் பகுதியில் வரும் மூர்த்தி எனும் நசரேன் பாத்திரம் ஊடாக ஆசிரியர் இக்கதையை சிறப்பாக நகர்த்தி இருக்கின்றார்.

கடற்கலம் ஒன்று செய்வதிலாகட்டும், மடி ஒன்றை உருவாக்குவதிலாகட்டும், கதைமாந்தர்களின் பாத்திரங்களையும் செயல்முறைகளையும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து அங்கம் அங்கமாக விவரிப்பதில் எஸ்.ஏ. உதயனின் பேனா முன்னிற்கிறது.

நாவலில் இருந்து சில சிறப்பான உரையாடல் களை இங்கு தரலாம் என்ற போதிலும் அலுவாக்கரையில் இடம்பெறும் நிகழ்வுகள் பேசாலை மண்ணுக்குரிய வட்டாரவழக்கு மொழிநடையில் இருப்பதால் நாவலை முழுமையாக வாசிக்கும் போதுதான் அதனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

பெருமுதலாளிகளின் கை ஓங்கி இருக்கும் காலப்பகுதியையும், தொழிலாளிகளின் கை ஓங்கி இருக்கும் காலமும், வியாபாரிகளின் கை ஓங்கி இருக்கும் காலம் தொழில் ரீதியாகவும் சமூக கட்டமைப்பு ரீதியாக வும் கூறப்படுவதால் சீரான கட்டுக்கோப்புடன் வாழ்ந்த சமூகத்தின் ஒழுக்கம், கட்டுப்பாடு பொன்ற முதன்மை யான விதிகலையும், காலப்போக்கில் அதனைக் கேள்விக்குறியாக்கும் விதி மீறல்களையும், முரண்களை யும் இந்நாவல் ஊடாக முன்வைக்கத் தவறவில்லை.


சமூகத்தில் கவனிக்கப்படாத மனிதர்களையும் கவனிக்கப்படாத சம்பவங்களையும் கோர்த்து பேசப் படாத மனிதர்களின் கதையை உலகிற்கு சொல்லுவது தான் இலக்கியமாகிறது. கலையில் உண்மையில்லை, ஆனால் உண்மையில்லாமல் கலை இல்லை என்பார் கள். அதுபோல இக்கதையிலும் உண்மையும் கற்பனை யும் கலந்து கொட்டியுள்ளது. ஆனால் பொய்யில்லை... இவை எல்லாம் நிறைந்தது தான் எந்த ஒரு சமூகமும்.

கடலின் அடியில் காடுகளாக விரிந்து கிடக்கும் இயற்கையின் அழகை இரசகிக்க திருகோணமலை புறாமலை, மன்னாரில் விடத்தல்தீவு, சிலாவத்துறை, அரிப்பு போன்ற பகுதிகளுக்கு ஒருமுறை சென்று பார்த்துவிட்டு இந்நாவலையும் வாசித்தால் இயற்கையின் முக்கியத்துவமும், கடல் வளம் என்ன என்பதையும் கதையாசிரியரின் இயற்கையைப் பாதுகாக்கவேண்டும் என்ற உணவும் ஒருங்கே புலப்படும்.

எந்த கதை ஆசிரியர் என்பவர் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவராக இருக்கும் போது கதை நல்லவளம் கொண்ட்தாக அமைந்துவிடும் அந்த வகையில் சாகித்ய நாயகன் எஸ்.ஏ. உதயனின் நாவல் வெற்றிபெற்றுள்ளதோடு கடற்சூழலியல் பற்றிய ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது மகிழ்ச்சி யளிக்கின்றது.

கந்தர்மடம் அ.அஜந்தன்

# ஈழ ஏதிலியர் சுமந்த வலிகளைச் சொல்லும் "தெம்மாடுகள்" நாவல் ஒரு இனத்தின் வாக்குமூலம்




இலக்கியப் பரப்பில் நன்கு அறியப்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.உதயனின் "தெம்மாடுகள்" ஈழவர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவிற்கு ஏதிலிகளாக நகர்ந்த காலத்தின் மறைக்கப்பட்ட அல்லது புரட்டப்படாத ஒரு பக்கத்தை காட்டி நிற்கும் ஒரு சிறந்த படைப்பு. 2009 ஆம் ஆண்டு 158 பக்கங்களோடு 15 அத்தியாயங்களைக் கொண்டு திருப்புமுனை வெளியீடாக வெளி வந்துள்ளது. 1986 முதல் 1990 வரை நூலாசிரியர் இந்தியாவில் அகதியாக வாழ்ந்த அந்த வலி நிறைந்த வாழ்வை ஆவணமாக்கும் முயற்சியின் பயனே இந்த "தெம்மாடுகள்". "தெம்மாடுகள்" என்பது கேரளாவிலிருந்து மன்னார் கிராமங்களுக்குள் நுளைந்த ஒரு வட்டாரச் சொல் என்றும், இயல்பு மாறி, அறியாமையில் உழலும் அப்பாவிகளை தெம்மாடுகள் என அழைப்பார்கள்" என்றும் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இருண்ட ஒரு யுகத்தினுள் திசை புரியாமல் நிகழ்ந்த நகர்வுகளை சித்திரிக்கும் இந் நாவலின் கதைக் களத்திற்கு மிகவும் பொருத்தமான அட்டைப் படத்தினை எசேயு வரைந்துள்ளார். மன்னாரில் தொடங்கி இந்திய மண்டபம் அகதி முகாமில் நிலை கொண்டு பின் மீண்டும் மன்னார் நோக்கி பயணப்படும் கதையாக விரியும் இந் நாவலை உணர்வுகளின் சங்கமமாய், வலிகளின் வடிகால்களாய், மறுக்கப்பட்ட நீதியின் சாட்சியாய், ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் ஓங்கி ஒலிக்கும் குரலாக தரிசிக்கமுடியும். வாசகனின் உணர்வலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருள் கவ்விய ஒரு காலத்தின் கசப்பான அனுபவத்தை மனதில் பதிவிட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

சமகாலத்தில் எழும் போர் இலக்கியம் பற்றிய விமர்சனக் கருத்துக்களை நன்கு உணர்ந்தவராய் இந் நூலின் அவசியத்தை அல்லது நியாயத்தை முன்னுரையில் விளக்கியுள்ளார். "ஒரு நாவலுக்குரிய விதிகளும், முறைகளும் இந்த நாவலில் இல்லாதிருக்கலாம். ஆனால் மனிதர்களின் உண்மைக் கதையை சொல்லும்போது விதி முறை தேவை என்று எனக்குத் தோன்றவில்லை அப்படி வரையறுக்கவும் விரும்பவில்லை. வாழ்க்கை என்பது ஒரு குறிப்பட்ட விதிமுறைக்குள் அடங்குவதில்லையே". என்ற தன்னிலை விளக்கமொன்றை முன் வைத்துள்ளார். அதனை ஆமோதிப்பவனாகவே இந்த நாவலுக்குள் பயணித்துள்ளேன். ஏனெனில் வலிசுமந்தவர்கள் தம் வலிகளை உயிரோட்டமாகச் சொல்வதில் அவர்களின் உணர்வுகளே



முன்னிலை வகிக்கின்றன. இவை ஒரு வகையான பகிர்தல் அல்லது வெளிப் படுத்தலாக அமைந்து விடுகின்றன. இவ்வாறான பகிர்தல் அல்லது வெளிப் படுத்தலில் வரையறைகள் வரம்புகளாக மாறி நாவலின் உயிரோட்டத்திலும், வலிகளின் கனதியிலும் ஒரு சரிவைக் கொண்டுவரக்கூடும். இருப்பினும் இலக்கியப் பண்பில் பெரிய வரட்சியை இந்த நாவல் கொண்டிருக்கவில்லை.

நாவலில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தமிழர் வாழ்வியலின் துன்பத்தைச் சுமந்து வருபவை யாகவும் அதனைத் தாண்டிய மனிதப் பலவீனங்களின் விம்பங்களாக சில பாத்திரங்களும் கதை நகர்வின் இறுகு நிலையை இறுதிவரை தக்கவைத்துள்ளது. மன்னார் மற்றும் மண்டபம் அகதி முகாம் பற்றிய வர்ணனைகள் எமக்கும் இந்த இடங்கள் பற்றிய ஒரு அனுபவத்தை கதை நகர்வின் வழி தந்துசெல்கின்றன. ஒவ்வொரு பாத்திரங்களின் பண்புகளையும் தோற்றத்தையும் நன்கு மனதில் வாங்கி இறுதிவரை அவர்களை உயிரோட்டமாக நகர்த்திச் செல்வது உதயனுக்கு பரீட்சயமானதென்பதை அவரது மற்றைய நூல்களும் புலப்படுத்துகின்றன. உதயனின் பொதுவான பண்புகளில் ஒன்றான இளமைத் துடிப்பையும், நடத்தைக் கோலங்களையும் வெளிப்படுத்தும் கதாபாத்திரங்களை அமைத்தல் அல்லது அதிலும் கவனம் செலுத்துவது இளம் வாசகர்களையும் கவரச் செய்கின்றது. இருப்பினும் சில சொற் பிரயோகங்களை தவிர்த்திருக்கலாமென்றே தோன்றுகின்றது. இவ்வாறான சொற்பதங்கள் வலிகளை ஆழப்படுத்திக் காட்டுவதோடு யதார்த்த நிலையையும் உணர்த்துவதால் கதைக் களத்தின் வடுக்களை காண்பிக்கும் ஒரு உத்தியாக அமைவதைக் காணமுடிகின்றது.

"இந் நூல் ஒரு இனத்தின் வாழ்வியல் பாங்கில் பெற்றுக்கொண்ட அகதி அனுபவத்தை தோலுரித்துக் காட்டுகின்றது" என்று வெளியீட்டாளர் அருட்பணி. வின்சன் பற்றிக் அடிகளார் தனது பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். "போர்க்கால இலக்கியங்களின் புரட்டாத பக்கங்கள்" என்று ஓ.கே.குணநாதன் அவர்கள் தனது அணிந்துரைக்கு தலைப்பிட்டுள்ளார். போர் இலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தினை இந்த நூல் பிடித்திருப்பது நூலாசிரியர் உதயனின் அனுபவத் திரட்டும் அவரின் எழுத்தாற்றலுமே. கலா என்ற ஒரு கைம்பெண் அல்லது கணவன் காணாமற் போய்விட்ட ஒரு அகதிப் பெண்ணே இந்த நாவலின் பிரதான பாத்திரம். தமிழர் சுமந்த வலிகளின் ஒட்டுமொத்த உருவமாக அவர் சித்திரிக்கப்பட்டுள்ளார். போரினால் ஏற்படும் உயிரிழப்பு, அவயவ இழப்பு, உடமைகளின் இழப்பு, இடப்பெயர்வு இவற்றை யெல்லாம் தாண்டிய போரின் பின்னரான வாழ்வியல் மாற்றங்கள் அல்லது நிர்ப்பந்தங்கள் இயல்பான மனித வாழ்விலிருந்து எப்படி எம்மை தூரப்படுத்துகின்றது அல்லது தனிமைப் படுத்தியிருக்கின்றது என்பதையும் அதற்கான எதிர் நீச்சல்களையும் கதை நகர்வில் இணைத்துச் செல்வது இந்த நூலின் இன்னொரு சிறப்பு.

விதிமுறைகள் தாண்டிய போர், எழுதப்படாத சட்டத்தில் இயங்கும் சமூகக் கட்டமைப்பு என்ற இருமுனைத்தாக்கத்தையும் நின்று எதிர்கொள்ளும் "கலா" என்ற பாத்திரம் ஈழப் பெண்கள் பலரின் பிரதி நிதியாகவே வலம் வருகின்றது. போரின் உக்கிரத்திலும் சாதி, மதம், அந்தஸ்து என்று அலையும் சமூகத்தின் மூத்த தூண்களையும் ஆட்டிப் பார்க்கும் திருப்பங்களுக்கு குறைவில்லை. அதிகாரத் துஸ்பிர யோகங்கள், பழிவாங்கல்கள், சித்திரவதைகள், காதல், காமம், கோபம், விரக்தி, தற்கொலை, விபச்சாரம், போதை, புறக்கணிப்பு என நீளும் கதைக் களம் ஒரு சினிமா அனுபவம்போல் மனதில் திரையிட்டுக் கொள்கின்றது. பல்லாயிரக்கணக்கான விதவைகளை விட்டுச் சென்றிருக்கும் முப்பது ஆண்டுகால யுத்தம் மனித வாழ்வின் கட்டமைப்பை எப்படி தகர்த்துள்ளது என்பதற்கு சிறந்த உதாரணங்களாக இந் நாவலின் பாத்திரங்கள் பங்குவகிக்கின்றன. விதவைகளின் மறுவாழ்வு பற்றிய சிந்தனைகள் வலுப்பெறவேண்டியதன் அவசியத்தையும் இந்த நூல் வெளிப்படுத்துகின்றது. விதவை என்ற ஒற்றைச் சொல்லால் ஒரு பெண்ணின் வாழ்வை முடக்கிவிட முடியாது. அவர் ஒரு பெண்ணாக, தாயாக வாழும்போது சமூகப் பாதுகாப்பு, சமூகத்தின் அங்கீகாரம், பொருளாதாரம், இளவயதின் உடல் மற்றும் உணர்வுத் தேவைகள் போன்றவற்றை தர்க்கரீதியாக உண்மைச் சம்பவங்களின் வாயிலாக சமூகத்தில் ஏற்படவேண்டிய மாற்றத்தை வலியுறுத்தும் நாவலாக இந்த நாவல் முக்கியத்துவம் பெறுகின்றது.

இடப்பெயர்வதென்பது தமிழரின் வாழ்வியலோடு ஒன்றிப்போன ஒன்று. ஒவ்வொரு தமிழனிடத்திலும் இந்த இடப்பெயர்வு அனுபவமென்பது வாழ்வதற்கான ஒரு தகுதியாக பார்க்கப்படுகின்றது. ஒரு சமூகம் தனது சொந்த ஊரைவிட்டு வெளியேறும்போது உயிரிழந்து, நிலமிழந்து, உடமையிழந்து, உறவிழந்து, உணவிழந்து, உடையிழந்து, சிரிப்பிழந்து, மானமிழந்து உயிரைமட்டும் கையில் பிடித்துக்கொண்டு உயிர்பிழைப்பதற்கு எந்த உத்தரவாதமின்றி கடல்கடந்த ஆபத்தான பயணத்தைத் தாண்டிச் சென்று நான்கு சுவற்றுக்குள் நடை பிணமாய் அங்கலாய்த்துக் கொண்டே முகாமிற்குள் தஞ்சமடைகின்றனர். மலையக தமிழர்களை இலங்கை அனுப்பியபோது போடப்பட்ட முகாமே மண்டபம் முகம். அதுவே தற்பொழுது ஈழத் தமிழர்களின் முகாமாகவும் மாறியுள்ளதென்ற வரலாற்றை கூறியுள்ளார்.

ஈழ மண்ணின் சாபங்களில் ஒன்றான காணாமல் ஆக்கப்படுதல் அல்லது கடத்தல்களால் பல பெண்கள் தாம் விதவையாக்கப்பட்டோமா இல்லையா என்பது தெரியாமல் வாழ்வின் தமது அடுத்த கட்டத்திற்கும் செல்லமுடியாமல் தவிக்கும் நிலை மிகவும் கொடியது. கலா என்ற பாத்திரமும் அவ்வாறானதே இளவயதில் காதல், எதிர்ப்பையும் தாண்டிய திருமணம், குடும்பத்தாலும் சமூகத்தாலும் ஒதுக்கி வைப்பு, கணவர் யோகன் கடத்தப்பட்டமை இதன் பின்பான சத்தியநாதனின் நட்பிற்கும் காதலுக்குமிடையில் உணர்வுகளால் ஊசலாடிய உறவு என்று நகர்ந்த கதைக்களத்தில் சத்தியநாதனின் இழப்பு பெரும் திருப்பமாக மாறியுள்ளது. தாங்குதிறன் அல்லது மீண்டெழுதல் பொறிமுறையில் ஒன்றான சமூகசேவையில் ஈடுபடுதல் அல்லது பிறருக்காக வாழப்பழகிக்கொள்ளல் என்பது ஒரு கருவியாக வும்

தன்னைச் சுற்றிய ஒரு பாதுகாப்பு வலையமாகவும் மாற்றியமைத்த கலா என்ற பாத்திரம் சிறந்தவொரு முன்னுதாரணம். இருப்பினும் இன்றுவரை மர்மமாகவே உள்ள ஸ்ரீபெரும்பத்தூர் குண்டு வெடிப்பில் பழிதீர்க்கப் பட்ட கலாவின் வாழ்வு பல உண்மைகளை உணர வைக்கிறது. தொடர் அழுத்தங்களும் சித்திர வதையும் பலரை மரணக் குழியினுள் வீழ்த்தியிருந்தாலும் கலா போன்ற பலரை வலிமையுள்ள சமூகப் போராளிகளாக்கி யுள்ளது நிதர்சனமானது.

படிப்பு, பணம், பதவி, சாதி, பெரியவர், ஊர்த் தலைவர் என்பதெல்லாம் "அகதி" என்ற ஒற்றைச் சொல்லால் களவாடப்பட்ட இடமாக அந்த அகதி முகாம் காண்பிக்கப்பட்டுள்ளது. இது சமத்துவத்திற்கும் மனமாற்றத்திற்கும் வழிசமைத்திருந்தாலும் இத்தனை விலைகொடுத்திருக்கவேண்டுமா என்ற வினாவும் கூடவே ஒட்டிக்கொள்கின்றது. உயிர் பிழைத்து கணவனையும் இழந்து வந்த பெண்ணொருவரை ஒரு சிலர் தமது தேவைகளுக்காக விபச்சாரத்தில் ஈடுபடுத்தி யிருந்தமை ஈழத்தின் மறைமுக போரின் தாக்கமாக இன்னமும் மறைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையாகவே பார்க்க முடிகின்றது. இருப்பினும் அந்தப் பெண்ணின் மனமாற்றத்தையும் சமூகம் ஏற்கவேண்டும் என்ற உதயனின் கதைவாயிலான கருத்து வரவேற்பிற்குரியது. கலா தன் கணவனின் இழப்பின்பின் ஆதரவின்றி கணவனின் நண்பனுடன் ஆறு ஆண்டுகள் நட்போடு வாழ்ந்தது சினிமாப் பாணியாக இருந்தபோதும் அதனூடாக சமூகச் சிந்தனைகளையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் விதமாக அவை அமைந்திருந்தன. தனது கணவன் கடத்தப்பட்டு காணாமற்போனபோதும் பொட்டழிக்காத கலா அவரது நண்பர் சத்தியநாதனின் மரணத்தை உறுதிப் படுத்தியவுடன் அவரை மனதால் கணவராக ஏற்று விதவைக்கோலம் பூண்ட தருணம் உணர்வுக் கலவைகளை மனதிற்குள் ஊற்றிச் செல்கின்றது. கண்ணால் யாரும் காணாதபோது எப்படி கணவன் யோகன் மரணித்துவிட்டார் என்ற முடிவிற்கு வர முடியும்?. கண்ணால் பார்த்த சாட்சிகள் சத்திய நாதனின் மரணத்தை உறுதிப்படுத்தும்பொழுது அதை எப்படி மறுதலிக்கமுடியும்?. கேள்விகளுக்குள்ளே வாழ்ந்துபோன கலாவின் வாழ்வு ஈழத் தமிழரின் ஒரு வாழ்க்கைக் குறியீடு. தமிழன் தனக்குத்தானே உதவும் வகையில் எங்குமே சங்கம் அமைப்பதும் குழுவாகச் செயற்படுவதும் ஆறுதல் அளிக்கும் விடயமாக அமைகின்றது. முகாமிற்குள் இயங்கும் "ஈழ ஏதிலியர் புனர்வாழ்வுக் கழகம்", எழிலனின் இளைஞர் குழு, அதன் பின் உருவான கலா, கோகிலா கூட்டணி போன்று தம்வலி மறந்து பிறருக்காக வாழப் பழகுதல் அனர்த்த காலத்தின் தேவை என்பதை உணர்தியுள்ளது.

அதிகாரிகளுக்குள் நல்லவர் கெட்டவர் இருப்பதைப்போல் எம்மோடு இருப்பவர்களிலும் நல்லவர் கெட்டவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு இடையில் வாழ்ந்துபோவதே வாழ்வாகிப்போன சூழலை கையாண்ட விதம் நம்பிக்கையூட்டக்கூடியவையாக உள்ளன. போரிற்கும் இடப்பெயர்வுகளுக்கும் அப்பால் காத்திருப்புக்களும், சலனங்களும், விருப்பும், சமூகத் தின் மீதான பயமும், எதிர்காலம் பற்றிய கேள்விகளும்



கலாவின் இளமைக் காலத்தை கரைத்த விதத்தினை எழுதுவதென்பது கத்திமேல் நடப்பதைப்போன்றது. நிதானமும், வார்த்தைகளில் கவனமும், விழுமியக் கோட்பாடுகளும், சமய நம்பிக்கைகளும் சிதையாத வகையில் அவை எழுதப்படவேண்டும். சில வரம்பு மீறல்கள் இருந்தாலும் அடுத்தடுத்து வரும் வலிமிகுந்த நிகழ்வுகள் வரம்பு மீறலை உணர்வலைகளுக்குள் அகப்படாமல் காத்துச்செல்கின்றது.

போரின் தாக்கத்தையும் சமூகத் தர்க்கங் களையும் தண்டவாளத்தின் இரு இரும்புப் பாலங் களாக்கி நாவலை அதன்மீது நகர்த்தியிருக்கின்றார். ஒரு நாட்டில் நடைபெற்ற யுத்தமாக இருப்பினும் தமிழர் வாழும் பிரதேசங்கள் தமது அமைவிடங்களுக்கேற்ப வேறுபட்ட போர்சார் அனுபவங்களையும் பாதிப்புக்களை யும் கொண்டுள்ளதென்பதை இந்த நாவல் எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் அமைவிடம் இந்த மக்களை இலகுவில் இந்திய எல்லைக்குள் செல்வதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது. அதனால் இந்திய முகாமின் அனுபவங்களை அதிகம் அனுபவித்த சமூகமாக மன்னார் (பேசாலை) திகழ் கின்றது. கதை முழுவதிலும் கிறிஸ்தவம் சார்ந்த பெயர் களும், பின்னணியும், நம்பிக்கைகளும் பேசாலையின் குறியீடாக பார்க்கமுடிகின்றது. ஆன்மீகத்தின் மீதான பற்றும் அவர்களை நகர்த்திச் செல்லும் ஒரு பாரிய சக்தியாகவே காண்பிக்கப்பட்டுள்ளது.

போர்க்கால இலக்கியத்தினுள் அனுபவப் படைப் பாக்கமாக வெளிவந்த நாவல்களில் அதிக இலக்கியப் பண்பினையும் வாசகரை ஈர்த்துவைக்கக் கூடியதுமான படைப்புக்களைக் கொடுத்த படைப்பாளியாக உதயன் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். ஒரு மண்ணில் நிகழும் தொடர் சுற்றிவளைப்பும் கொலைகளும் கடத்தல்களும் அந்த மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்கி தேசம் விட்டு தேசம் அகதியாக வாழவைத்துவிட்ட அவலங்கள் எதிர்காலச் சந்ததிக்கு தெரிவிக்கும் ஆவணமாக தெம்மாடுகள் அமைந்துள்ளது. வலியறியாத சமூகம் ஒரு குறிக்கோளற்ற பாதையில் பயணிக்கும்போது உதயனின் நாவல்கள் அவர்களுக்கு திசைகாட்டும் என்றே நம்புகின்றேன்.

மன்னார் அமுதன்

# எஸ்.ஏ உதயனின் "கப்பித்தான்"

தொன்றுதொட்டு இன்றுவரையுள்ள காலம் முழுவதும் போர், பஞ்சம், நோய்த்தொற்றுகளில் இருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக வளமான, அமைதியான இடங்களை நோக்கி புலம் பெயர்வதும் போகும் இடங்களில் தம் இருப்பைக் காப்பாற்றிக்கொள்ள போராடுவதுமே வரலாறாக உள்ளது.

கப்பித்தான் எனும் இந்நாவல் தென்னிந்திய தூத்துக்குடி துறைமுக மக்களின் பெயர்வையும் அதை யொட்டி மன்னார் தீவில் பேசாலை எனும் ஊர் உருப் பெறுவதையும் அம்மக்களின் தொன்மைக் கலையாகிய "உடக்கு பாஸ்" யாரால் எங்கிருந்து பேசாலைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதைப் பற்றிய தேடலுக்கு விடையுமாக அமைந்துள்ளது. "கற்பித்தவன்" என்பது காலப்போக்கில் மறுவி கப்பித்தான் எனும் சொல்வழக் காகி இருக்கலாம். உடக்கு பாஸ் பற்றிய பல்வேறு ஊகங்களும் கற்பனைகளும் கதைகளும் பேசாலையில் உண்டு. அவையெல்லாம் அம்மக்கள் அக்கலையின் மீது கொண்டிருக்கும் தீராப்பற்றாலும் அதை ஆற்று வற்கு எடுக்கும் பெரும் உழைப்பாலும் பக்தி முயற்சியா லும் திரண்டு வந்தவை.

தொன்மக்கலைகளின் ஊடாகவே மனித வர லாறு கடத்தப்பட்டும் கண்டடையப்பட்டும் வந்துள்ளது. கப்பித்தான் நாவலானது வரலாற்று ஆவணங்களை ஆய்வுசெய்து அதன் மூலம் ஒரு புனைவாக உருப் பெற்றுள்ளது. சம்பவங்கள் நடைபெறும் காலம் ஒப்பீட்டளவில் முன்பின்னாக இருந்தாலும் ஒரு புனைவு எனும் அடிப்படையில் இவை ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவையே. திருமணங்களில் மட்டுமே இன்று சாதி, சமயங்கள் பார்க்கப்படுகின்றன. ஒரு வரலாறாகப் பார்க்கும் போது மக்கள் கூட்டம் குலம், கோத்திரம், தொழில் ... என ஏதோ ஒரு அடிப்படையில் தம்மைத் மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் கொள்வதே வரலாறு. அது ஏற்றத்தாழ்வைக் குறிப்பதல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்கள் வாழும் சூழலில் இப்படித்தான் பிணக்குகள் இருக்கும். அவை அப்படியே காலத்தால் மறைந்தும் போகும். கற்பனைகளையே வரலாறாக எழுதியுள்ள பெரும் பான்மையினருக்கு மத்தியில், "கலையில் உண்மை உண்டு. ஆனால் உண்மை கலையாகாது" என்பதற் கேற்ப வரலாற்று உண்மைகளோடு கற்பனைக் கதா பாத்திரங்களையும் காட்சிகளையும் சேர்த்து புனையப் பட்ட "குலப்பெருமைகளைக் கூறும்" வரலாற்று புனைவாக கப்பித்தான் முழுமையடைந்துள்ளது.

மையக்கதாப்பாத்திரமான பறுனாந்து மன எழுச்சி கொண்ட இளைஞனாக, சமூகநீதிக்காக நண்பர்களையும் இணைத்து போர் தொடுக்கும் வீரனாக படகிலேறி மன்னார் தீவிற்கு வந்தபின் பரதவக்குடிகளை வழிநடத்தும் பொறுப்புணர்வுமிக்க தலைவனாக, கொலரா கண்டு மக்கள் இறக்கும் போது சமூக சேவ கனாக, பிரிந்துசெல்லும் உறவுகளை ஒன்றினைத்து, அவர்களுக்கு இடம் கொடுத்து, ஊர்களை ஒன் றிணைத்து "பேர்சாலை" எனப் பேரிடுவதில் நல் வழிகாட்டியாக, உடக்குபாசை மணப்பாட்டில் இருந்து பேசாலைக்கு கொண்டு வந்து காட்டியதில் நல்ல கலைஞனாக என தன் வாழ்க்கை முழுவதும் தன்னை உருமாற்றிக் கொண்டே வரும் நீர்போல கப்பித்தான் பறுனாந்து மிக முதிர்ச்சியுடன் நாவலை இறுதிவரை கொண்டுவருவது கதையின் உச்சம்.

ஒருபுறம்கடையர் இன மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். மறுபுறம் பரதவ இனமக்கள் தீவிற்குள் வந்து சேர்கிறார்கள். காலம் ஒரு சூழலை இவ்வாறு தான் சமன் செய்கிறது. மன்னார் தீவில் பேரளவில் வசிக்கும் சமூகங்களின் வரலாற்றைக் கூறும் நாவலாக கப்பித்தான் உள்ளது. திரெசெல்லா (செல்லா) ஒரு முற்போக்கான பெண்ணாக, பறனாந்து தவித்து நிற்கும் போது பரதவ தலைவனின் மனைவியாக உரிய ஆலோசனைக் கூறுபவளாக முன்னிற்கிறாள்.


கத்தோலிக்க "கொன்சால் சாமியாரின்" பக்க பலமான ஆலோசனைகளும் தீர்க்கமான திட்டமிடல் களும் வழிகாட்டல்களும் இம்மக்களின் நிறைவான வாழ்க்கையிலும் போராட்ட வாழ்க்கையிலும் கத்தோலிக்க மதத்தின் வகிபங்கு பற்றிப் பேசுகின்றது.

"உண்மை கலையல்ல" என்பதற்கேற்ப குலப்பெருமைகூறும் தொன்மக் கலைகள் மிதமிஞ்சிய கற்பனைகளால் தம் மூதாதையர்களைப் பற்றி அடுத் தடுத்த தலைமுறைகளால் வாய்வழியாக பிரமாண்ட மான பிம்பங்களாகக் கட்டியெழுப்பப்படுபவை. கீழுள்ள தலைமுறைகளுக்கு கதைகளாக சொல்லப்படுபவை. அவை முற்றிலும் கற்பனையாக இருந்தால் வரலாற்றில் நெடுந்தூரம் பயணிக்க முடியாமல் போயிருக்கும். எனவே அவை முற்றிலும் கற்பனையானவை என புறக்கணிக்கப் பட முடியாதவை. ஆனால் கலையில் உண்மையுண்டு என்பதற்கேற்ப ஆய்வுகளின் மூலம் கலையில் உள்ள உண்மையெனும் சரடு தனியாக உருவப்பட்டு தனி வரலாறாகவும் எழுதப்படவேண்டும்.

இலங்கையின் நாவல் உலக வரலாற்றில் எழுத்தாளர் எஸ்.ஏ.உதயனிற்கு ஒரு சிறப்பிடம் உண்டு. சிதைவுண்டும் மறுக்கப்பட்டும் வரும் வரலாற்றை ஒரு சீராக கோர்த்து எழுத்துருவாக்குவது எளிதான காரியம் அல்லை. அவருடைய தொடர் உழைப்பும் தேடலும் ஆய்வுமே இந்த கப்பித்தான் நாவல். ஆசிரியரின் பிற நாவல்களைப் போல "கப்பித்தானும்" இலக்கிய உலகில் பேசப்படும் நாவலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மன்னார் மக்கள் தம் வரலாற்றை அறிந்துகொள்ள வாசிக்க வேண்டிய நாவல். நாவலாசிரியரும் சாகித்ய நாயகனுமாகிய எஸ்.ஏ.உதயன் அவர்கள் இன்னும் பல நாவல்களை எழுத வேண்டும் எனும் தேவை மன்னாருக்கு உண்டு.

கலாநிதி சு.குணேஸ்வரன்

# வாசாப்பு




வாசாப்பு என்பது கூத்துக்கலையைப் பற்றிய புனைவாகும்.

மன்னார்ப்பிரதேசத்தின் கூத்துக்கலையை உயிரோட்டமாகச் சொல்லும் நாவலே வாசாப்பு ஆகும். வாசாப்பு என்பது இரண்டு இரவு நாடகமாக சமய வழக்காற்றுடன் தொடர்புபடுத்தி கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் நேர்த்திக்கடனுக்காக நடிக்கப்படுவதாகும். மன்னார்ப் பிரதேசக் கூத்துமுறையை மீட்டுப் பார்க்கும் கதை.

கூத்து ஒரு கலைஞனோடும் ஊரோடும் எப்படிப் பின்னிப் பிணைந்தது என்பதை இந்நாவலூடாக ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

"கிராமியக் கலைகளும் அதன் வீரிய வீச்சங்களும் முனைமழுங்கிப் போயிற்று. நகரமயமாதல் என்ற நகர்த்தலில் எமது பண்பாட்டு வாண்மைகள் பதுங்கிப் படுக்கின்றன என்ற இக்காலத்து அச்ச உணர்வுதான் இப்படியொரு நாவலை எனக்கு எழுதத் தூண்டியது." என்று உதயன் எழுதுகிறார். (வாசாப்பு - என்னுரை )

இதனை, கூத்துக்கலை பற்றி இலங்கையில் எழுந்த முதல் தமிழ் நாவல் என விமர்சகர் செ. யோகராசா குறிப்பிடுகிறார். விமல் குழந்தைவேல் உட்பட பலரின் சிறுகதைகள் கூத்துக்கலை பற்றி வந்துள்ளன வாயினும் "வாசாப்பு" நாவல்தான் முதல் முயற்சியாக அமைகின்றது.

இந்நாவலில் கூத்துப்பற்றிய விலாவாரியான விபரிப்புகள் இடம்பெறுகின்றன. வாசாப்புக் கூத்துத் தொடங்குதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் வரன்முறையான சில வழக்காறுகள் இங்கு பதிவு செய்யப்படுகின்றன.

நாடகம் படிப்பதற்கான அறிவித்தலை பறையடித்து கிராமத்திற்கு தெரிவிக்கும் வழக்கத்துடன் தொடங்குகின்றனர். தொடர்ந்து கூட்டம் கூடுதல், நடிகர்கள் தெரிவுசெய்தல், நாடகம் பழக்குதல், ஏடு திறத்தல், வரவு கொடுத்தல், பழக்கம், கொச்சை கட்டுதல், கப்புக்கால் நடுதல், படிப்பு, மங்களங்கட்டி நேர்த்தி அவிழ்ப்பு என்ற சடங்குகளின் ஊடாக இக்கூத்து முறைமைக்கான படிமுறைவழக்கம் கூறப்படுகிறது. அத்தோடு மத்தளகாரர், கட்டளைக்காரர், அண்ணாவியார், மற்றும் கூத்துக் கலைஞர்கள் பற்றிய வர்ணணைகளும் வருகின்றன.

அமலதாசு, குருசுமுத்துப்புலவர் ஆகிய உண்மையான கலை உள்ளங்களின் நிலையும் கூறப்படுகிறது.

"மேடைக்குப் பக்கத்தில் கதிரையைப் போட்டு நாடகம் பாத்துக்கிண்டிருந்த குருசுமுத்துப் புலவருக்கு அது நாடகமாகத் தெரியயில்ல. அது சீவியமாத் தெரியுது. நெஞ்சு குமுறிக் குமுறிவிழுகிது. போர்க் களத்தில் அவரும் போய் நிக்கிற மாதிரி துறுதுறுவெண்டு நரம்பு மண்டலம் புடைக்குது. அவரு எழுதின நாடகம் காவியமாப் போகுதெண்டு பூரிப்பு. இப்ப அவரிட புத்திக்குள்ள இருந்து மனசாட்சி கதைக்குது. "அப்பா குருசு நீ பெரிய புலவன்தான்டா.. பிறந்தா உன்ன மாதிரிப் பிறந்து உன்னமாதிரி வாழணுமடா.. இனி.. நீ.. செத்தாலும் பரவாயில்ல.." நினைப்புக்கு ஏத்த மாதிரி உடம்பு பாரம் குறைஞ்சு நேத்து இருந்த கையுளைச்சல் காணாமப் போய்ச்சு" (வாசாப்பு)

ஏரேது என்றால் அது அமலதாசுதான் மிகப் பொருத்தமான கலைஞன் என்ற எண்ணவோட்டம் ஊரார் மனதில் ஏற்பட்டுவிடுகிறது.

"கோணான் கூத்து முடிச்சிட்டுது. இனி நமக்கு ஆட்டம்தான். தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட அமலதாசு அலுமாரிக்கு மேல இருந்த மரமுடியை பார்க்கிறாரு. "வந்திட்டுடா நமக்கு வேலை" அவர் முகத்தில சிரிப்பு முளைச்சு கண்ணு பளபளக்குது. பக்குவமா அந்த மரமுடியைத் தொட்டு தூக்கிறாரு." (வாசாப்பு)

நாவலில் அமலதாசுவின் சந்தோசமும் துக்கமும் ஆற்றாமையும் மிகச் சிறப்பாகக் கூறப்படுகின்றன. குருசுமுத்துப் புலவரின் மரணம் கூத்துக்களரியிலேயே நிகழ்ந்துவிடுகிறது. இது கலைக்காகவே வாழ்ந்த உண்மையான மனிதனை இனங்காட்டுகிறது.

உள்ளோட்டமாக கிளைக்கதையாக துப்பரவுத் தொழிலாளர் சாதியின்பெயரால் எப்படி அப்பிரதேசத்தில் இருந்து விரட்டப்பட்டார்கள் என்பதும் அடிமைகுடிமைத் தொழிலின் நிலையும் கூறப்படுகிறது. உயர்வர்க்கத்தினர் செய்யும் சூழ்ச்சிகளில் அவர்கள் அகப்பட்டு விடுவதும் சாதிமான்களின் முன் கூனிக்குறுகி நிற்கும் அவர்களின் நிலையும் எடுத்துக்காட்டப்படுகிறது.

இந்நாவலில் வரும் கட்டளைகாரரின் மகனும் அதிகாரத்தின் ஒரு குறியீடுதான். அவன் அந்த வீட்டில் வேலை செய்யும் துப்பரவுத் தொழிலாளப் பெண்ணைப் பலவந்தமாக ஏமாற்றி தனது இச்சையைத் தீர்த்துக் கொள்கிறான். அது வெளியே தெரிய வந்தபோது அவளை கள்ளப்பட்டத்துடன் வீட்டைவிட்டே கட்டளைக்காரர் வெளியேற்றுவதும் மிக இயல்பாக நடந்துவிடுகிறது. அதேநேரம் அந்தக் குடும்பங்களின் குடியிருப்பைத் தங்கள் கிராமத்தைவிட்டே அகற்ற வேண்டும் என்று சந்தர்ப்பம் பார்த்திருந்த அதிகார வர்க்கம் அதையும் மிகத்தந்திரமாகச் செய்து முடித்துவிடுகிறது.

ஆசிரியர் ஒரு கலைஞனாக இருந்து எழுதிய இந்நாவலின் ஒவ்வொரு நகர்வும் மிக நுட்பமாகச் செதுக்கி எடுக்கப்பட்டிருக்கின்றது. பண்பாட்டின் அடியாகக் கட்டியெழுப்பப்பட்ட நாவலாக இருப்பது அதன் மற்றுமொரு சிறப்பு எனலாம்.

(எஸ்.ஏ. உதயன் நாவல்கள் கட்டுரையின் ஒரு பகுதி நன்றி : இணையம்)

# நேர்காணல்

எஸ்.ஏ.உதயன் ஈழத்தின் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவர். தொடர்ச்சியாக நல்ல நாவல்களை வாசகர்களுக்கு தந்து கொண்டிருக்கும் படைப்பாளி. கவிதை, சிறுகதை போன்ற இலக்கிய வகைமைகளிலும் வல்லமை உடையவர். கூத்துக் கலைஞராக விளங்குபவர்.



## எஸ்.ஏ.உதயன்
## சந்திப்பு : பரணீ

பரணீ:
உங்கள் பெற்றோர் பிறந்த இடம் கற்ற பாடசாலை தொழில் குடும்பம் பற்றி அறிய விரும்புகிறோம்.

எஸ்.ஏ.உதயன்:
மன்னார் மாவட்டத்தில் பேசாலையென்ற பெருவூர்தான் நான் பிறந்த, வளர்ந்த, வாழ்கின்ற ஊர். மன்னார் தீவின் நடுப்பாகத்தில் வடகரையை அண்மித்த எங்கள் ஊர் தொன்மைக் கலைகளைப் பேணுகின்ற ஒரு ஊராகும். எங்கள் ஊரின் வடக்கிலும் தெற்கிலும் கடல் வாய்த்திருப்பதால் வாடை, கோடையென இரண்டு காலத்திலும் மீன்பிடிபடும்..

மீன்பிடி வாய்த்த ஊரில் செல்வம் குறையா திருக்கும்.. அங்குதான் ஆரோக்கியநாதர் துரம் - ரெஜினா பீரிஸ் என்பாரின் ஐந்து பிள்ளைகளில் நான்காவது பிள்ளையானவனாய் நான்.. மன்/ பத்திமா வித்தியாலயமாக இருந்த பள்ளியில் இணைந்து அது மன் பத்திமா மகாவித்தியாலயமாக தரமுயரும் வரை யிலுமான காலத்தில் உயர்தரம் கற்றுத்தேறி வெளி யேறிய நான் ஒரு ஈழப்போராளியாக இந்தியாவில் இருந்தபோது சென்னை எல்லிஸ் டவுன் கூத்துப் பட்டறை மாணவனாக நாடகம், அரங்காற்றுகை என்பவற்றை முறைப்படிகற்ற அவ் அனுபவத்தை தமிழ் நாட்டின் பலபாகங்களிலும் ஈழ விடுதலைக் கருத்துக் களை நாடக வெளிகளில் பரப்புரையாக விதைக்கும் பணியாற்றி வந்தேன். துயர இரவுகள் (கூத்துருவ நாடகம்) இதுதான் வழி, எங்கே போகிறோம் என்ற நாடகங்களை சிறப்பான அரங்குகளில் மேடையேற்றினேன். தமிழக பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் எழுதினேன்.

*1989*ல் தாயகம் திரும்பியபோது மனைவி பிள்ளையென்ற புதிய உறவுகளோடு வாழ்க்கை வழியில் கடினப்பட்டேன். கூலித்தொழிலாளியாக காலம் கடந் திருந்தது.. மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்குட்டிகள்.. ஒருபெண்.

*1998*ல் எனக்கு ஆசிரியப் பணி கிடைத்தது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை. நுண்கலைப் பிரிவில் இயல்பாக எனக்கு கைவந்த ஓவிய ஆசிரியராகப் பயிற்சி பெற்று திரும்பியிருந்தேன். நிறைந்த அனுபவக் குவியலோடு.. மனதுக்கு இனிதான தொழில்.. நாடகம் நாட்டுக்கூத்து என வாய்த்த போது இருதய வலி நோயாக துயரம் சூழ்ந்தது.. இருதய அறுவை சிகிச்சை *2006* ல் நடந்தது.

மூன்று மாதங்கள் சம்பளத்தோடு ஓய்வு.. வீட்டிலிருந்தேன். சதா நாடகம் கூத்து என ஆடிய கால்களும் தேகமும்.. அந்த ஓய்வை ஏற்றுக்கொள்ள மறுத்தன.. ஏதாவது செய்யணுமே.. சிறுபராய ஆழ்ந்த வாசிப்பு எழுதத் தூண்டியது.. எழுதினேன்..

அது தான் லோமியா நாவல்..

கி.பி.அரவிந்தன் பிரான்சிலிருந்து பா.ஜெயப் பிரகாசம் என்ற அவரது நண்பரை என்னிடம் அனுப்பி யிருந்தார். நான் எழுதியநாடகப்பிரதிகளை வாங்கி வரச் சொன்னதாகச் சொன்னார். அரவிந்தன் அவையெல்லாம் புத்தகமாக்கப்போவதாகச் சொன்னாராம்.. எனக்கு அதில் உடன்பாடில்லை.. அவையெல்லாம் தேவைகருதி அவ்வப்போது எழுதியதுதானே.. வேண்டுமானால் இப்போது எழுதிக்கொண்டிருப்பதைத் தருகிறேனே என்றேன். அந்த நண்பர் அதனை வாசித்துவிட்டுச் சொல்கிறேன் என்று கொண்டு சென்றவர் பிறிதொரு நாளில்.. இது நன்றாக இருக்கிறது.. முடித்து தாருங்கள் என்று தகவல் சொல்லியிருந்தார் ஓரிரு நாட்களில் அந்த

நாவலை முடித்துக் கொடுத்தேன்.. அவ்வளவுதான்.. அதுதான் 2008 ம் ஆண்டு வெளிவந்த லோமியா நாவல்.. அதற்கு எடுத்த எடுப்பிலேயே வரவேற்பு இருந்தது.. பிறகு என்னால் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை.. என் வாசகர்கள் என்னை எழுதாமல் இருக்கவும் விடவில்லை.

பரணீ:

பாடசாலைக் காலத்தில் இலக்கிய ஆர்வம் ஏற்படுவதற்கு தூண்டு கோளாக அமைந்த காரணிகள், காரண கர்த்தாக்கள் பற்றிக் கூறுங்கள்?

எஸ்.ஏ.உதயன்:

பாடசாலைக் காலம் தான் எனக்குள் இருக்கும் படைப்பாளியை இந்த உலகிற்கு வெளிப்படுத்தியது. மாணவர் தேர்ச்சி மன்றங்களில் நான் தயாரித்து வழங்கிய இசையும் கதையும், தனி நடிப்பு, பாடல் என்பன பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

நான் சாதாரண தர மாணவனாக இருந்தபோது நான் "வளர்மதி" என்ற கையெழுத்த சஞ்சிகை யொன்றைத் தயாரித்து மாணவர் மன்றத்தில் வாசித்த போது, அதைப் பாராட்டி அதனை பாடசாலை நூலகத்தில் இடுமாறு அதிபர் என்னிடம் கேட்டுக் கொண்டது என்னை வலுப்படுத்தியது. நான் தொடர்ந்து அந்த சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து அதனை மாணவர் மன்றத்தில் ஒவ்வொரு மாதமும் வாசிப்பேன்.

நான் ஓங்கிய குரலெடுத்த வாசிப்பதை எல்லோரும் பாராட்டினார்கள். இலங்கை வானொலி யின் சிறந்த அறிவிப்பாளர்களைப் போன்று நான் வாசிப்பதாகச் சொல்லுவார்கள். அது எனக்குப் பெருமையாக இருக்கும்.

அவ்வாறே பாடசாலை விழாக்களுக்கு நாடகங் களை எழுதித் தயாரித்து மேடையேற்றவும் அப்போது அங்கிருந்த ஆசிரியர்கள் என்னை ஊக்குவித்தார்கள்.

நான் என் பாடசாலைக் காலத்திலேயே இலங்கை வானொலிக்காக நாடகம் எழுதி கொழும்புக் குச் சென்று அங்குள்ள ஒலிப்பதிவுக் கலையகத்தில் நாடக ஒலிப்பதிவைச் செய்ததை நான் பெருமையாகச் சொல்லிக் கொள்வேன்.

இந்த அனுபவங்களே என்னை இலக்கியப் பரப்பினை நேசிக்கவும் இயங்கவும் செய்தது.

அது எனது பாடசாலைப் பராயம் தான் எனினும் இவ்விடத்தில் நான் எனது அம்மா பற்றிச் சொல்ல வேண்டும். என் அம்மா அதிகம் படித்தவர் இல்லையென்கிற போதிலும் அவர் பரந்த வாசிப்பாள ராக இருந்தார்.

நாவல்கள், கட்டுரைகளை விரும்பி வாசிப்பார். அக்காலத்தில் வெளிவந்த "வீரகேசரி"ப் பிரசுரமான அத்தனை நாவல்களையும் வாசிப்பார்.

என் பாடசாலைக் காலத்திலேயே அம்மா தான் என்னை வாசிக்கத் தூண்டியவர். அந்த வாசிப்பு பழக்கம் என்னையும் ஒரு எழுத்தாளராக்கியிருக்கிறது என்பதுதான் எனக்குப் பெருமையளிக்கிறது.

பரணீ:

உங்களது முதற் படைப்பு எது? வெளியான ஊடகம் யாது?

எஸ்.ஏ.உதயன்:

நாவல் இலக்கியத்தில் எனது முதல் படைப்பாக வெளிவந்தது "லோமியா" என்ற நாவல். இது 2008 ம் ஆண்டில் வெளிவந்தது. அமரர் கவிஞர் "கி.பி.அர விந்தன்" அவர்கள் அப்பால் தமிழ் என்ற புலம்பெயர் தமிழர்களின் ஊடக வெளியொன்றின் மூலம் தமிழ் நாட்டில் "சாளரம்" வெளியீட்டாளர்கள் (கவிஞர் வைகறை வாணன்) இந் நாவலை வெளியிட்டிருந்தார்.

இன்று சர்ச்சைக்குட்பட்டிருக்கும் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளின் அத்துமீறிய எல்லை தாண்டலும் எமது பிரதேச மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் பற்றி பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பிரதேசவாசி என்ற வகையில் நான் அவதானித்ததை நாவ லாக எழுதியிருந்தேன். இந்திய இழுவைப்படகுகளிடம் கடலில் தினம் தினம் போராடும் எம்மீனவர்களின் துயர் செறிந்த வாழ்வு பற்றிய நாவல் அலுவாக்கரை.. மீனவர் களின் அன்றாடத்தில் நிகழும் நிகழ்வுகளாக.. கடற் கரையையே தமது சீவாதாரக் களமாக வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களில் நடக்கும் பிரச்சினைகள் என்பவற்றைச் சொல்லும்போது புலிகளின் தாயகப் போரும் அதில் நேரடியாகவோ மறைவாகவோ பங்கு பற்றிய மீனவர்களும், புலிகளுக்கு போராட்டத்தில் உதவ வேண்டும் என்பதற்காக தாம் தொழில் செய்யும் கடற் பிராந்தியத்தை இந்தியப்படகுகளுக்கு தாரைவார்த்து விட்டு பின்பு புலிகளிடமே வாங்கிக் கட்டிக்கொண்ட கதைகள்.. மக்களே இந்தியப்படகுகளுக்கு எதிராக கடல் யுத்தம் நடத்திய சம்பவங்கள்.. இன்றைக்கு மீனவர்களின் சீவாதாரம் தொலைந்து போன நிலை என்பவற்றை அலுவாக்கரை நாவல் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

கப்பித்தான் - நாவல்

இது ஒரு வரலாற்று நாவலாக எழுதப்பட்டது. உசாத்துணை நூல்கள், ஆய்வாளர்கள்.. மூத்தவர் களுடனான செவ்விகள், செவிவழித் தகவல்கள் என்ப வற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். மன்னார் பேசாலையில் காணப்படும் மரபார்ந்த தொன்மைக்கலையான "உடக்குப்பாஸ்" எனும் பொம்ம லாட்டத்தின் தோற்றுவாய் பற்றிப் பேசுகிறது இந்நாவல். அத்தோடு மன்னார்த்தீவின் வட கரையோரத்தில் குடிவந்தவர்களின் மதம், சடங்குகள், கலாசாரம், சாதி என்பன ஒன்றாயிருப்பதன் காரணம்.. அவர்களின் வருகை பற்றிய செய்திகளில் காணப்படும் சுவாரஸ்யங்கள், தப்பித்துப் பிழைத்தல், என்பவற்றோடு சங்கிலி மன்னன் நடத்திய கிறீஸ்தவர்களுக்கெதிரான சங்காரப் படு கொலைகள் என்பவற்றை வரலாற்று ரீதியாக ஒப்பு விக்கும் ஒரு நாவலாக இது திகழ்கிறது.

தமிழ்நாட்டில் எதிர்பதிப்பக வெளியீடான இப்புத்தகம் 2022ல் சென்னைப் புத்தகக் திருவிழாவில் தமிழக முதல்வரால் வெளியீடு செய்யப்பட்ட புத்தகத் தொகுதியில் ஒன்றாகும். இந்நாவலை லண்டனில் இருக்கும் நண்பர் மயூரன் அவர்கள் அங்கு எடுத்துச் சென்று நாவலின் அறிமுகத்தையும் ஆய்வரங்கையும் நடத்தியிருந்தார். இந்நேரத்தில் அவருக்கு எனது மானசீக அன்பையும் நன்றியையும் காணிக்கையாக்குகிறேன்.

ஆயினும் இந்நாவலை இலங்கைக்கு கொண்டு வர என்னால் இயலாதிருந்தது. பூபாலசிங்கம் புத்தகசாலையினால் கொண்டுவரப்பட்டிருந்தது. இப்போது அதன் பிரதிகள் தீர்ந்து விட்டன எனவும் அறிந்தேன்.

இப்போதும் திருந்தாதி எனப்பெயரிடப்பட்ட ஒரு கடற்புரத்து நாவலை எழுதியிருக்கிறேன்.. எதிர் வரும் காலத்தில் அதனை அச்சுக்கு ஏற்ற எண்ணி யிருக்கிறேன்.

பரணீ:

கப்பித்தான் நாவல் எதிர் கொண்ட சவால்களும், வெற்றியும் பற்றிக் கூறுங்கள்

எஸ்.ஏ.உதயன்:

2022ல் கிளிநொச்சியில் கவிஞர் கருணாகரன் சிவராசா ஏற்பாட்டாளராய் இருந்து நடாத்திய இலக்கியச் சந்திப்பு அமர்வில் மன்னார் பேசாலையில் நடைபெறும் “உடக்குப்பாஸ்” எனும் பொம்மலாட்டக் கலை பற்றிச் சொன்னேன்.

அங்கிருந்த அனேகமான ஆன்றோருக்கு அந்தச் செய்தி புதியதாக இருப்பதாகச் சொன்னார்கள். அந்தச் பொம்மலாட்டக் கலைப்பற்றி அறிவதற்கு ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

நான் அவர்களிடம் “உடக்குப் பாஸ்” பொம்மலாட்டக் கலை பற்றிய போதிய விபரங்களை ஒருநாவல் வழியாகவே உங்களிடம் பகிருவேன் எனச்சொல்லியிருந்தேன்.

சொன்னேனே தவிர அதை எப்படி ஆரம்பிப்பது எனும் குழப்பத்தில் இருந்தேன். எனக்கு “Fr.வெனான்சியோ, பெனான்டோ எழுதிய“கடலோரம் கடவுள்” என்ற சிறு பாரய வாழ்க்கை சரிதம் என்ற புத்தகம் கிடைத்தது. அப்புத்தகத்தில் நான் தேடிக் கொண்டிருந்த உடக்குப் பாஸ் பொம்மலாட்டத்தின் தோற்றுவாயும், செயற்பாடும் பற்றிய அரிய தகவல் கிடைத்தது. அந்தத் தகவலின் அடிப்படையில் பிள்ளையார் சுழி போட்டேன். இன்னும் தேவையான தகவல்களை சேகரித்துப் படிக்க. மன்னாரின் வடகரையில் குடியேறிய பரதவர் பற்றிய வரலாறு.. வெளித்தெரியாத நிகழ்வுகள், சம்பவங்கள் எனக்குப் புரிய ஆரம்பித்தன. ஆய்வாளர் டேவிட் சேர் எனது முயற்சிக்கு உறுதுணையாக இருந்தார்.

எமது முன்னோர்களின் வரலாற்றுத் தெளி வினை “கப்பித்தான்” நாவலில் தரிசிக்கலாம். அவர்களின் வாழ்க்கை நெறியும், அவர்கள் கைக்கொண்ட கலை, கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்பவற்றை அறியும் போது ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆச்சரியங்களை எனது “கப்பித்தான்” நாவலில் எழுதினேன்.

இப்போது “கப்பித்தான்” நாவல் சென்னையில் வெளியிடப்பட்டு லண்டனில் அறிமுகம் செய்யப்பட்டு இலங்கையிலும் கிடைக்கிறது. இது எனது பெருமுயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

பரணீ:

உங்களது சிறுகதைகளுக்கான கருத்துக்களை எவ்வாறு தெரிவு செய்கிறீர்கள்?



எஸ்.ஏ.உதயன்:

நம்மைச் சுற்றி நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்வுகளிலிருந்தும் நாம் கதைக் கருக்களைக் கண்டு பிடிக்க முடியும். கதைக்கா வேறு எங்கிலும் நாம் தேடிச் செல்ல வேண்டியதில்லை.

சில வேளைகளில் நாம் கேட்கின்ற, வாசிக்கின்ற செய்திகள் கூட ஒரு சிறுகதைக்கான கதைக் கருவைத் தரும். அசாதாரணமான மனித நடத்தைகளை அவதானிக் கும் போதும், அவ்வாறான நிகழ்வுகளில் இருந்தும் நாம் கதைகளை எழுத முடியும்.

பரணீ:

மண்வாசனை சார்ந்த படைப்புக்களை படைப்பதற்கான கால அவகாசம், அவதானிப்பு பற்றிக் கூறுங்கள்?

எஸ்.ஏ.உதயன்:

ஒரு நாவலுக்கான கதாபாத்திரங்களைப் படைக்கும் போது அப்பாத்திரம் தோன்றக் கூடிய சூழல் தான் கதைக்களமாக மாறுகின்றது.

நிகழும் சம்பவத்தில் மண் சார்ந்த இயற்கையை யும் வளங்களையும், மண்ணுக்குரிய பேச்சு மொழியையும் நாவலுக்கு பங்காளிகளாக்குவது சிறப்பான விடயமாகும்.

கடற்புறம் சார்ந்த கதையில் கடலையும் நாம் ஒரு பாத்திரமாக சேர்த்துக் கொள்கிறோம். கடலின் அமைதி யும், கொந்தளிப்பும் கதைக்குத் தேவையான உணர்வை வெளிப்படுத்த வல்லன.

“சடையனின் மனம் போலவே கடலோரம் நின்ற பனையும் பேய்க் கூத்து ஆடிக்கொண்டிருந்தது“ என்று எழுதும் போது ஒரு புயல் காற்றினைச் சொல்லும் பொது சடையன் என்ற பாத்திரத்தின் மனம் அலைக்கழிவதையும் சொல்லுவதாகும்.

இதில் இயற்கை தொடர்பான அவதானிப்புடன் நமக்கு எழுத வேண்டும் என்ற தவிப்பும் தான் நாம் எழுதும் காலத்தையும் நிருணயிக்கிறது.

முன்பெல்லாம் ஒருவருடத்திற்கு ஒருநாவல் என்று எழுதினேன். இப்போது அவ்வாறு காலத்தை நிருணயிக்க முடியவில்லை.

தேவையும் நோக்கமும் தான் முக்கியம்.

பரணீ:
மன்னார் பிரதேசத்தில் முக்கியத்துவம் என நீங்கள் கருதுபவை?

எஸ்.ஏ.உதயன்:

மன்னார் பிரதேசம் பற்றி அரை குறையாகக் கேள்விப் பட்டவர்கள் மன்னாரை வரட்சிக்கும் வறுமைக்குமான இடமென்பார்கள். மன்னாரில் கழுதை களைத் தவிர வேறென்ன உண்டு என்று கேட்பவர்களும் உண்டு.

நான் எனது இடத்தினை விட்டுக் கொடுக்கா மல் கதைக்கிறேன் என்றில்லாமல் நீங்களும் மன்னாரை விளங்கிக் கொள்ள வேண்டுமென அழைக்கிறேன்.

கடல் வளம், மண்வளம், பனை வளம், காட்டு வளம், வயல் வளம், நதி வளம் என்று பார்க்குமிட மெல்லாம் இயற்கையால் அலங்கரிக்கப்பட்ட இடம் தான் மன்னார்.

ஒரு புனை கதையாளன் என்ற வகையில் மன்னார் என கற்பனைக்கும் எழுத்துக்கும் போது மானதாய் இருக்கிறது என்பதை வலியுறுத்துகிறேன்.

என் எழுதுகோளின் ஆயுள் வரையிலும் எழுத எழுதக் குறையாத முக்கியங்கள் இங்கு உண்டு.

பரணீ
நீங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள், பட்டங்கள் பற்றிக் கூறுங்கள்?

எஸ்.ஏ.உதயன்:

01. வடமாகாணம் தமிழ் இலக்கிய விழா 2009 சிறந்த நூல் பரிசு லோமியாநாவல்
02. வடமாகாணம் தமிழ் இலக்கிய விழா - 2010 சிறந்த நூல“ பரிசு தெம்மாடுகள்நாவல்
03. வடமாகாணம் தமிழ் இலக்கியப் பெருவிழா 2011 சிறந்த நூல் பரிசு வாசாப்பு நாவல்
04. வடமாகாணம் தமிழ் இலக்கியப் பெருவிழா 2012 சிறந்த நூல் பரிசு சொடுதா நாவல்
05. வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா 2014 சிறந்த நூல்பரிசு சங்கு முள்ளு நாவல்
06. வடக்கு மாகாண பண்பாட்டுப் பெரவிழா 2016 சிறந்த நூல் பரிசு உபி83
07. அரச இலக்கிய விருது 11 வாசாப்பு நாவல்
08. அரச இலக்கிய விருது 2012 சொடுதா நாவல்
09. கொடகே தேசியங சாகித்தியய விருது 2012 சொடுதா நாவல்
10. இலங்கை இலககியப் பெரவை விருது 2008 லோமியா நாவல்
11. இலங்கை இலக்கியப் பேரவை விது - 2011 சொடுதா நாவல்
12. தமிழியல் விருது 2008 லோமியா நாவல்
13. தமிழியல் விருது 2010 தெம்மாடுகள் நாவல்
14. பேனா கலை இலக்கிய விது 2014 சங்கு முள்ளு நாவல்
15. இளைஞர் பரிசளிப்பு ஆனந்த கீர்த்திகா சிறந்த நாடக நெறியாளர் விருது 1998
16. வடமாகாண பாரம்பரிய கலைகளுக்கான ஆளனர் விருது 2014 அண்ணாவியார்
17. போதைப்பொருள் தவிர்ப்பு நாடளாவிய போட்டி 1998 நாடகப் போட்டி முதற்பரிசு.
18. பிரதேச கலாசார விழா 2017 “கலைச்செம்மல்“ விருது.
19. மன்னார் மாவட்ட கலை இலக்கியப் பெருவிழா 2017 “மன் கலை சுரபி“ விருது
20. SAARC-LITERARY FISTIVAL ON SOUTH ASIAN NOVEL OFFICIAL NOMINEE of SRI LANKA- 2013 THIMPHU, BHUTAN.
21. கொடகே கையெழுத்துப் பிரதிபோட்டியின் முதலிடம்பெற்ற நாவல் “அலுவாக்கரை“ விருதும்பரிசும் 2019
22. அரச சாஹித்திய விருது அலுவாக்கரை நாவலுக்கா 3010
23. வடமாகாண சிறந்த நூல் விருது அலுவாக்கரை நாவலுக்காக 2019
24. சிறந்த பாடலாசிரியர் விருது (கரோல் மன்னார் கலையருவியின் மாவட்ட கரோல் கீதம் போட்டி) 20

பரணீ :
கவிதை, சிறுகதை நாவல் போன்ற இலக்கியத்துறையில் இயங்கிக்கொண்டு இருக்கும் நீங்கள் அதிகமாக நாவல்களையே வெளியீடு செய்வதற்கு காரணம் யாது?

எஸ்.ஏ.உதயன்:

ஈழத்து இலக்கியப் பரப்பில் நாவல்களின் போதாமை காணப்படுவதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

கவிஞர்களின் உருவாக்கம் அதிகரித்த அளவிற்கு நாவலாசிரியர்கள் இல்லை. கடந்த காலத்தில் நாம் கொண்டாடிய பல நாவலாசிரியர்கள் இப்போது நம்மோடு இல்லை.

புனை கதை இலக்கியத்தில் சிறுகதையும், நாவல்களும் மனித மனங்களை ஊடுருவி சிந்திக்க வைக்கின்றன.

நாவலில் எடுத்தாளப்படும் நியாயங்கள் வாசகப் பரப்பில் விமர்சிக்கப்படுகின்றன. சில நாவல்கள் சர்ச்சை களையும், பிரச்சினைகளையும் கூட சமூகத்தில் ஏற்படுத்தி விடுகின்றன.

இதுவெல்லாம் ஒரு புறமிருக்க வாசிக்கக் கூடிய பராயம் வந்ததில் இருந்து நான் அதிகம் வாசித்தது நாவல்களைத்தான்.

சில நாவலாசிரியர்களின் எழுத்த வாண்மை கண்டுநான் பிரமித்திருக்கிறேன். வியந்திருக்கிறேன். மனதுக்குள் அவர்களின் எழுத்தைப் பூட்டி வைத்து ஆராதித்திருக்கிறேன். இது போல நானும் எழுத வேண்டும் எனக் காத்திருந்திருக்கிறேன்.

அதனாலே தான் நான் நாவல்களையே வெளியீடு செய்து வருகிறேனோ... தெரியவில்லை... சிறுகதை, கவிதை என்பவற்றை விட அதிக பிரயத்தனப் பட வேண்டியிருப்பது நாவலுக்குத்தான்... என்ற போதிலும் அதையே நான் தெரிவு செய்கிறேன்.

இலக்கிய வெளியானது என்னை ஒரு நாவலா சிரியராகப் பார்த்த பின் அந்த உருக் கட்டுமானத்தை உடைக்க விரும்பாத மனநிலையாகவும் இருக்கலாம்.

ஆயினும் கூட எண்ணற்ற கவிதைகளையும், கண்ணீர் அஞ்சலிக் கல்வெட்டுக்களையும். வாழ்த்துப்

பாமாலைகளையும் எழுதி வருகிற நான் ஏன் அவற்றைப் புத்தகமாக்கக் கூடாது..? இப்படி இது நாள்வரை நினைத்ததில்லை. என்னுடைய இலக்கிய நண்பர்களான பலரும் கவிஞர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களில் இருந்து நான் எழுத்து வகையில் தனித்திருக்க நினைக் கிறேனோ என்னவோ. ஆனால் நான் எழுதி மேடை யேற்றிய நாட்டுக் கூத்துப் பிரதிகளை நூலாக்க வேண்டு மென நாடக பாடம் நடத்தும் சில ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். எனத அண்மைக்கால நாட்டுக் கூத்துக்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடலாமே எனவும் யோசிக் கிறேன்.

**பரணீ :**

**உங்களுடைய "மாஸ்ரர் பீஸ்" என நீங்கள் கருதும் நாவல் எது? காரணம்?**

**எஸ்.ஏ.உதயன்:**

"கப்பித்தான்" நாவலைத்தான் எனது மாஸ்ரர் பீஸ் என்கிறேன்.

உங்களின் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டுமே என்பதற்காகச் சொல்லுகிறேன். நீங்கள் பெற்ற பிள்ளைகளில் எது நல்ல பிள்ளை எனக் கேட்டால் ஒரு தாய் எப்படிப் பதிலளிப்பாளோ அது போல தான் நானும் யோசிக்கிறேன்.

ஒவ்வொரு நாவலையும் எழுதும் போது இது தான் எனது சிறந்த நாவலாக இருக்குமென நினைத்துத்தான் எழுதுகிறேன்.

ஆயினும் எழுதியவற்றையெல்லாம் ஒன்றாக வைத்துப் பார்க்கிறேன். அவற்றில் எனக்கு "கப்பித்தான்" நாவல் பிரத்தியேகமாகத் தெரிகிறது.

அப்பப்பா! எத்தனை உழைப்பு ஆய்வு, வாசிப்பு, தேடல் என்று பிரயத்தனப்பட்டது. கப்பித்தானுக்குத் தான். பேசாலையின் உடக்குப்பாஸ் குடிப்பரம்பல், மன்னார்க் கிராமங்களின் கட்டுமானம், இங்கிருந்த சாதிய மக்களுடன் எழுந்த பிணக்குகள் என்று பல்வேறு பிரச்சினைகளை ஆதாரத்தோடு முன்வைத்த ஒரு வரலாற்று நாவல் கப்பித்தான்.

அதை எழுதும் போது எனக்கு முன் இருந்த பிரச்சினை இரண்டு தான். ஒன்று வரலாற்றை பிழையின்றி சரியாக எழுத வேண்டும். இரண்டாவது வரலாற்றை சுவாரஸ்யமாக எழுத சில நியாயமான புனைவினையும் எழுதிச் சேர்க்க வெண்டும்.

கச்சிதமாக எழுதினால் தான் வேறு பிணக்குகள், கேள்விகள் எழும்பாது என நினைத்தேன். இப்போது இந்நாவல் குறித்து எனக்கு மனம் நிறைந்த திருப்தி. இதுதான் மாஸ்ரர் பீஸ்.

**பரணீ :**

**உங்கள் படைப்புக்களுக்கு வாசகர்கள் கொடுக்கும் முக்கியத்து வம் பற்றிக் கூறுங்கள்**

**எஸ்.ஏ.உதயன்:**

பொதுவாக வாசகப் பரப்பில் வெளிவரும் ஒரு புதிய நாவலுக்கு வாசகர்கள் தரும் முக்கியத்துவம் என்பது வாசிப்பதுடன் நின்று விடுவதில்லை. அதனை மற்றவர்களும் வாசிக்க வேண்டுமென்பதற்காக சில



முயற்சிகளை எடுப்பார்கள்.

எனது நாவலையும் எனது வாசகர்கள் சில செயற்பாடுகள் மூலம் பரவலாக்கம் செய்கிறார்கள். மன்னாரில் எனது நாவலுக்கென்று இருக்கும் வாசகர் வட்டம் பௌர்ணமி தின ஒன்று கூடலில் நாவல் பற்றிய கருத்தாடல்களை நடாத்துகிறார்கள்.

பாடசாலை நூலகங்களில் எனது நாவல்களுக் காக தனி அலகு ஒன்றினை ஸ்தாபித்த வைத்திருக் கிறார்கள். தினக்குரல், தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் எனது நாவல் பற்றிய கட்டுரைகளை எழுதி வெளிப்படுத்துகிறார்கள்.

இணைய வழி உரையாட்லகளை நிகழ்த்து கிறார்கள். இந்த வகையில் **2013**ம் ஆண்டு சென்னை தரங்கினியில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அரங்கில் எஸ்.ஏ.உதயன் படைப்புகள் எனும் தலைப்பில் நடை பெற்ற ஆய்வுகள் கட்டுரைகள் என்பன எனது வாசகர்கள் எனது நாவலகளுக்க தந்த முக்கியத்துவம் எனக் கொள்ள முடியும்.

அதே போல லண்டனில் நடாத்தப்பட்ட "கப்பித்தான்" நாவல் அறிமுகம் ஆய்வரங்கும் வாசகர்கள் எனது நாவலுக்கு வழங்கிய முக்கியத்தவமாகும்.

எனது நாவல்களை வெளிநாடுகளின வாசகர் களுக்காக என்னிடம் கேட்டுப் பெறுகிற வாசக நண்பர் கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்விடத்தில் நன்றி கூறுகிறேன்.

**பரணீ :**

**ஈழத்தில் தற்போது வெளியாகும் நாவல்கள் பற்றி உங்கள் கருத்து?**

**எஸ்.ஏ.உதயன்:**

நல்லது.. இப்போதெல்லாம் புதிதாக சில ஈழத்து எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்.. ஆனால் அதிகமாக கடந்த யுத்தகாலத்தில் வடுக்களைச்சுமந்த எழுத்துக்க ளாகவே அவை காணப்படுவதுதான் நெருடுகிறது. தமிழ்

அரசியல்வாதிகள் இனவாதத்தைக் கையிலெடுத்துத் தான் இலங்கையில் அரசியல் நடத்த வேண்டும் என்று பேசித்திரிவது போல எழுத்தாளர் களும் அவ்வாறே அப்படி இருந்துவிட முடியாது..

நமக்கென்று பேசக்கூடிய பாடுபொருள்கள் பலவுண்டு. சமூகத்தில் புரையோடிப்போன அல்லது புதிதாக உள்நுழைந்து சமூகத்தை அலைக்கழிக்கும் பிரச்சினைகளுமுண்டு.. புதிய எழுத்தையும் கையி லெடுக்க வேண்டும்.

புலம்பெயர்ந்து எழுதுபவர்கள் இப்போது வேறுநடையில் பயணிக்கிறார்கள்.. எழுத்திலும் பல புதிய உத்திகளைக்கையாள முடியும்.

பரணீ :

ஈழத்தின் முக்கிய நாவல்கள் என எவற்றை நீங்கள் கருதுகிறீர்கள்..?

எஸ்.ஏ.உதயன்:

ஈழத்தில் எழுந்த நாவல்களில் முக்கியமானவை யாகும் சிறப்பானவையாகவும் கருதக்கூடிய பல நாவல்கள் இருந்த போதிலும் என்னால் வாசித்து சிலாகிக்கப் பட்டவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம் என் நினைக்கிறேன்.

1. சம்பந்தன்- ஆறாவடு
2. விமல் குழந்தைவேலு- கசகரணம்
3. மெலிஞ்சி முத்தனின்- வேருலகு
4. நோயல் நடேசன்- அசோகனின் வைத்தியசாலை
5. செங்கைஆழியன்- ருத்ரதாண்டவம்
6. யோ.கர்ணன்- கொலம்பசின்வரைபடம்
7. அஸ்ரப்சிகாப்தீன்- ஒருசிரங்கை பேரீச்சம்பழம்
8. அமல்ராஜ் பிரான்சிஸ்- பட்டக்காடு
9. ஷோபா சக்தி - கொரில்லா
10.. குணா கவியழகன்- நஞ்சுண்டகாடு

இது பூரணமான பட்டியலல்ல.. எழுமாற்றாக பத்து நாவல்களைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

பரணீ :

இன்னும் வெளியீடு செய்யவிருக்கும் படைப்புகள் பற்றி அறிந்து கொள்ளலாமா?

எஸ்.ஏ.உதயன்:

இவ்வருடம் எழுதி நிறைவுக்கு வர இருக்கும் "திருந்தாதி" நாவலை வெளியீடு செய்யலாமென எண்ணி யிருக்கிறேன். முடிந்தால் நான் எழுதிமைடையேற்றிய நாட்டுக்கூத்துக்களின் பிரதிகளை அச்சிடலாமெனவும் நினைக்கிறேன்..

பரணீ :

இன்று நாவல் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளிகள் அருகி வருவதற்கான காரணங்களாகக் கருதுபவை?

எஸ்.ஏ.உதயன்:

இதற்கு நேரடியாகப் பதிலளித்தால்... ஸ்மார்ட்போன் போன்றவைகளின் ஆக்கிரமிப்பால் நாவல் வாசகர்களின் தொகை குறைந்திருக்கிறது.



அச்சக விலை அதிகரித்திருப்பதனால் எழுதுபவர்களால் சமாளிக்க முடியாதிருக்கிறது.

புத்தக விழாக்களில் கலந்து கொள்பவர்களின் தொகை கணிசமாகக் குறைந்திருக்கிறது.

எழுத்தாளர்களின் படைப்புக்களை நேசித்து, வாசித்த மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மை வாசகர்களிடம் இப்போது குறைந்திருக்கிறது. புத்தக விற்பனையின் சரிவும் இவ்வாறு நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

பரணீ :

மன்னார் பிரதேச படைப்பாளிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

எஸ்.ஏ.உதயன்:

மன்னாரில் மிகச்சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் இருக்கிறார்கள் என்ற போதிலும் அவர்களின் தொடர் தேர்ச்சியான இலக்கியப்பங்களிப்பு அரிதாக இருப்பதை அவதானிக்கிறேன்.

படைப்பாளிகள் சமூகத்தின் சொத்துக்களா வார்கள்.

அவர்கள் கொண்டாடப்படவேண்டியவர்கள்.

படைப்பாளிகளுக்கான அந்தஸ்து, மரியாதை யென்பவை அவர்கள் வாழும் சமூகத்தால் வழங்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் இலக்கியம் என்பதைவிட மதமும் அரசியலும் பொருளாதாரமும் மேலோங்கி ஒரு இலக்கியவாதியின் பெருமைக்கு பக்கம் விளைவிப்பதாக அமைந்துவிடுகிறது.

இந் நிலையில் படைப்பாளிகளும் காலத்திற்குத் தகுந்த படைப்புக்களை வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டும். புறச்சூழ்நிலைகளின் காரணமாக சில நல்ல எழுத்தாளர்கள் தாம் எழுதியது போதும் என ஓய்ந்து விடுகிறார்கள். நாங்கள் ஒவ்வொருவரும் சந்திக்கிற போதெல்லாம் இவைகள் பற்றிக் கதைப்பவர்களாகத் தான் இருக்கிறோம்.

எஸ்.ஏ.உதயன்

# செருப்பு

பாதர் சவரி.. தூக்கம் வராமல் புரண்டார்.. நாளைக்கு பூசை முடிஞ்ச கையோட வெளிக்கிடணும்..

இந்தமுறை ஆயர் இல்லத்தில தான் நமக் கெல்லாம் ஒளிவிழாவாம்.. மறைமாவட்டத்தில் இருக்கிற எல்லாச்சுவாமிமாரையும் அங்கு வரச்சொல்லி யிருக்காரு ஆயர்.. அவர் பதவியைப் பொறுப்பெடுத்தப் பிறகு இது முதல் ஒளிவிழா.. இந்த வருசம் எல்லாருக்கும் நந்தார் வாழ்த்தும் ஆசிர்வாதமும் அவருதான் குடுக்கணு மென்டு நினைக்க.. அதுதான் அவருக்கு சந்தோசமாம்..

சவரிச்சாமிக்கும் மனசில் ஒரு நினைப்பு ஓடுது "இந்த முறை எல்லாச் சுவாமிமாரையும் ஒரு இடத்திலே சந்திச்சு "விஸ்" பண்ணிறவேணும்.."

அவரு சுவரில தொங்கின மணிக்கூட்டப் பாக்கிறாரு.. மணி ஒன்டரையக் கடந்திருந்தது..

காலம சைக்கிள மிதிச்சு வசந்த புரம் மட்டும் ஓடினா.. அங்கால பேயாறு ..அதில சந்தானிட

பரிசலப் புடிச்சு ஆத்தக் கடந்தா.. ஒரு மூணு கிலோமீற்றர் நடை.. வேகமா நடந்து துறையூரில வைச்சு டவுண் பஸ் புடிச்சு.. பத்து பதினொரு மணிக்கெல்லாம் பட்டினத்து பெரிய பஸ் ஸ்டாண்டில பஸ் புடிச்சா அங்கால பின்னேரம் ஆறுமணிக்கெல்லாம் திருமங்கலம் போய்ச்சேந்திரலாம்.. அங்கால ஆட்டோவோ டாக்சியோ புடிச்சு ஆயர் இல்லத்தில போய் இறங்கிரலாம்.. என்டு நினைச்சபடியே கிடந்தவருக்கு நித்திரை வந்த நேரம் தெரியல..

வழக்கம்போல விடிய நாலு மணிக்கு எழும்பி முழங்கால்படி போட்டு செபம்.. ஐஞ்சுமணிக்கு குளிச்சி முழுகிற்று ஆறுமணிக்கு பூசை.. ஆறரைக்கு அவசரமா வெளிக்கிட்டாரு.. காலை ஆகாரம் பழைய சோறு தான்.. பச்சைமிளகா வெங்காயம் வெட்டிப்போட்டு தேசிப் புளியும் உப்புத்தண்ணி விட்டுப் பிசைஞ்ச பழைய சோறு தான் அவருக்குப் பிடிக்கும்.. மண் சட்டியில ஊத்தி ஊறு காயோட தொட்டுக் குடிச்சா..அதுவே அவருக்குப் போதும்..

வேற விட்டபடியே பாதர் எழும்பி எப்போதும் பயணத்துக்கென்டு ரெடியா இருக்கிற துணிப்பைய தோளில் மாட்டிக்கின்டு வெளிக்கிட்டார்.. வழமைக்கு மாறா பாதர் வேகமா உழக்கிறாரு..

வயல் வெளியில் இருந்து பறக்கிற தட்டான்பூச்சி மூஞ்சியில அடிக்கிறது அவருக்கு இம்சையா இருந்துது.

பனிக்கு தலையில் சுத்தின துவாய்த்துண்டுத் தொங்கலால அவரு முகத்தையும் துடைச்சுக்கிண்டாரு.. பேயாத்துல தண்ணி முட்ட முட்ட நிக்குது.. எரும மாடுகள் கொசுக்கடிக்காக தண்ணியி கிடக்கிறது பாறைகள் மாதியே தெரியுது.

நல்ல வேளைக்கு பரிசல்காரன் சந்தானம் சொல்லி வைச்சமாதியே காவலில் கிடந்தான்..

"ஏறுங்க சாமி சுருக்கமா கொண்டுபோய் விட்டுறன்.."

இந்த ஊர்ல இப்பிடித்தான்.. குருப்பிரசாதிக்கு குடுக்கிற மரியாதை அப்பிடியிருக்கும்.. சவரிச்சாமியார் தான் இந்த ஊர்க்காரன்களுக்கு கண்கண்ட தெய்வம்.. மறுவா சேரிக்குள்ளயே பிறந்து பெரிய படுப்பு படிச்சு சாமியாரா வாறதின்டா சும்மாவா.. சவரிச்சாமிட அப்பன் இசக்கி புள்ளயப் படிக்வைச்சு ஆளாக்கின பாடு அந்த ஆண்டவருக்குத்தான் தெரியும்..

நான் எங்க ஆளுங்களுக்கே சேவை செய்யப் போறன் என்டு வெளிக்கிட்டதுதான் அவருக்கு அந்த ஊரில அந்தளவு மரியாதை..

ஊர் உலகத்தில எங்க ஆளுகள கீழ்சாதி.. என்டு ஒடுக்கி வைச்சுப்பாத்தாலும்.. கடவுளிட பார்வையில நாமதான் பெரிய சாதியென்டு சவரிச்சாமி சொல்லுற தான் எங்களுக்கு வேதம்.. என்டு எல்லாரும் சொல்லுறாங்க..

பட்டணத்தில அவசரமா பஸ் ஏறினபோது காலில கிடந்த செருப்பு கால வாரிட்டுது.. பெரு விரல் மாட்டுற தோல் வளை சராட்டுன்டு அறுந்திட்டுது..

"தூக்கி வீசிரலாமா.. ச்சே..தைச்சுப்போட்டா இன்னும் ஒருவருசத்துக்குப் பாவிக்கலாம்.."

அவரு பைக்குள்ள ரெண்டு செருப்பையும் திணிச்சாரு..

"ம்..இனிப்போய்ச்சேருமட்டும்.. வெறுங்கால் தான்.."

சவரிச்சாமிக்கு ஆயர் இல்லத்துக்குப் போய்ச் சேருறது மட்டுந்தான் நினைப்பு.. அங்கு போற மற்றச் சாமிமார் எல்லாருமே இந்நேரத்துக்கு அங்க போய்ச் சேந்திருப்பாங்க.. அவங்கல்லாம் இவரு மாதியா.. காரும், வேனும், மோட்டச்சைக்கிளுமா எல்லாரும் ஓடித்திரியிறபோது இந்த மனுசனுக்கு அதிலெல்லாம் நாட்டமில்ல.

சவரிச்சாமி ஆட்டோ புடிச்சு ஆயர் இல்லத் துக்கு வந்து சேர்ந்த போது எட்டுமணியாப் போச்சுது..

சவரிச்சாமிக்கு மனசுக்குள்ள ஒரு குற்ற உணர்வு.. அவரு பிந்தி வந்திட்டமென்டு மனசு கிடந்து அறுக்குது.. ஆயர அவசங்கப்படுத்திட்டோமென்ட கவல வந்திட்டுது.

ஆயர் இல்ல ஒளிவிழா முடிஞ்சு எல்லாச்சாமி மாரும் வெளிக்கிட்டுப்போயிட்டாங்க..

"ஏன் பாதர்.. நீங்க வந்திட்டுதான் இருக்கீங்க என்டு நான் அவங்ககிட்ட சொன்னன் பாதர்.. அவங்க யாருமே அதக்கண்டுக்கலையே.." ஆயர் இல்ல வேலைக்காரர் அந்தோணி சொன்னது சுருக்கென்டு தைச்சுது..

"அதல்லாம் ஒண்டுமில்ல.. அவரவருக்கு இருக்கிற வேல அப்பிடியாக்கும்.." சவரிச்சாமி சமாளிச்சிட்டு ஆயருக்காக காத்திருந்தாரு..

ஆயருக்கும் முகம் சரியில்ல.. சந்தோசமா ஏசு ஆண்டவர் பிறப்பக்கொண்டாடணுமெண்டு இருக்கிற அந்த மனுசனிட நெஞ்சிலும் பாரம் ஏறியிருந்துது.

"சவரிச்சாமியிட முகம் பார்த்து வாழ்த்துச் சொல்ல ஒரு சாமியும் நிக்கலயே.."

ஒடுக்கப்பட்ட சாதியா இருந்து அந்த மக்களுக்கே நாளும் பொழுதும் பணி செஞ்சு கிடக்கிற சவரிச்சாமியப் பாத்து கதைக்கிறதில இவன்களுக்கு கௌரவக்குறைச்சல்..

"பாதர்.. நீங்க ஒண்ணும் கவலப்படாதீங்க.. நீங்க களைச்சுப்போய் இருக்கிறீங்க.. போய் சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க.."

அதுக்கு மேல ஆயராலயும் கதைக்க ஏலுதில்ல.. நெருஞ்சி முள்ளுமாதி நினைப்பு குத்துது.. "சாமி மாருக்குள்ளயே இப்பிடி சாதிவெறி தல விரிச்சு ஆடுதே ஆண்டவரே.. நாளைக்கு காலையிலேயே புறப்படணும்.. எனக்கு பங்கில நிறைய வேல இருக்கு.. "

"ம்..சரி.."

"இங்கிட்டு யாரும் செருப்புத் தைக்கிற ஆள் இருக்காங்களா சாமி.. என் செருப்பு அறுந்து போச்சு தைக்கணும்.." பைக்குள்ள இருந்த செருப்ப எடுத்து வெளியில போட்டாரு..

"அதெல்லாம் காலையில பாத்துக்கிள்ளலாம்.. நீங்க இப்போ போய் படுங்க.."

ஆயருக்கு மற்றச் சாமியார்கள் மீதிருந்த வெப்பிசாரம் குறையாமல் இருந்தது.

ஆனால் சவரிச்சாமி நடந்து முடிந்திருந்தவைகள் எதையுமே மனங்கொள்ளாமல் எப்போதும்போல சாதாரணமாயிருப்பதைப்பார்க்க ஆயருக்கு என்னவோ போல் இருந்தது.

சவரிச்சாமி.. காலையில எழும்பி புறப்பட்டாரு.. வெறுங்கால் என்னும்போது அறுந்த செருப்பு ஞாபகம் வந்தது.. வாசலில அதைப்போட்டு வைச்சிருந்தத நினைச்சு அதைத் தேடினாரு..

"போகிற வழியில அதத் தைச்சிரலாம்.. இங்கே தானே போட்டு வைச்சேன்..எங்க போயிட்டுது.."

படியிறங்கி ஆயர் வருவது தெரிந்தது..

"நான் புறப்படுறன் சாமி.. இதில் போட்டுவைச்ச என்னோட செருப்பக்காணயில்ல..அதான் தேடிட்டிருக்கன்.."

"அது இங்க இருக்கு பாதர்.." செருப்பு ஆயரின் கையிலிருக்கிறதைப்பாத்துப் பதறிப் போனாரு சவரிச்சாமி.. "ஏன் சாமி.. எதுக்கு.."

பாய்ஞ்சு போய் ஆயரிட கையில இருந்ததப் பிடுங்கி எடுக்கிறாரு..

அது தைக்கப்பட்டிருக்குது.. "அதுக்குள்ளயா.. ராத்திரியில யாரு வந்து தைச்சது..?"

"வேற யாருமில்லை நானேதான் தைச்சேன் பாதர். நான் என்ர அறைக்கு எடுத்திட்டுப் போய் தைச்சன். "

சவரிச்சாமிக்கு நம்ப முடியாமல் இருந்துது.

"பாதர் ஒரு கடற்பயணத்தில கப்பலில என்னோட பிரயாணம் பண்ணின தோல்ப்பொருள் தைக்கிற ஆட்களிட்ட இருந்து பழகினன்.. இப்பதான் அதிட பிரயோசனம் கிடைச்சிது.."

சவரிச்சாமிக்கு யேசு ஆண்டவரே முன்னுக்கு நின்டு கதைச்சமாதி இருந்துது..

"பாதர்.. ஆண்டவரிட வேதத்த உண்மையாவே வாழுற உங்கட செருப்ப தைக்க கிடைச்சது எனக்கு சந்தோசம்.."

"இந்த பெருமைக்குரிய ஆயர் என்னட. செருப்ப"

சவரிச்சாமிக்கு கண் துமிச்சுது.. "எனக்கு மனசு நிறைஞ்ச கிறீஸ்மஸ் வாழ்த்து இதான் சாமி.." ரெண்டுபேரும் கட்டிப்பிடிச்சுக் கொண்டார்கள்.

# கடிதம்

அன்புக்கும் மதிப்புக்குமுரிய
திரு உதயன் அவர்களுக்கு,

தாங்கள் அன்போடு அனுப்பிவைத்த தங்களின் "உ.பி 83" நாவல் கிடைத்தது. மிகவும் மகிழ்தேன். எனது நன்றிகள்.ஆதவன் தீட்சண்யா, வாசுகி பெரியார்தாசன் ஆகியோரின் உரைகளோடு தங்களின் உரையையும் மட்டுந்தான் இப்போது வாசித்து முடித்துள்ளேன். இனிமேல்த்தான் நாவலை வாசிக்க வேண்டும். மிக விரைவில் வாசிப்பேன்.

தங்களின் உரையில் இந்நூல் தங்களின் ஏழாவது படைப்பெனக் குறிப்பிடப் பட்டுள்ளதை அவதானித் தேன். தங்களின் ஆறு வெளியீடுகளில் மூன்று நாவல் களையும், ஒரு சிறுகதைத் தொகுதியையும் மட்டும் நான் வாசித்துள்ளேன்.


தங்களின் நூல்களைப் படித்ததில், தங்களைப் பற்றிய பதிவொன்று என் மனத்திலுண்டு. தங்களின் அவதானிப்புகளும், கிரகித்தல்களும், புரிதல்களும், புரிந்ததைச் சமூகஇயங்கியல் நகர்வோடு பொருத்திப் பார்க்கின்ற அதை வெளிப்படுத்துகின்ற வாண்மையும் தங்களிடம் நிறைய வுண்டு. அதே வேளை, தங்களிடம் உள்ளுறைந்துள்ள அனுபவச் செழிப்பும், இறந்த காலச் சம்பவங்களை ஒழுங்கு முறையில் இரைமீட்புச் செய்கின்ற கூர்மையும், மொழி வாண்மையும் குறிப்பிடக் கூடிய அம்சங்களாகும்.

"மன்னார் பிரதேச மண்வாசனையை வெளிப் படுத்திய முதலாவது நாவலாசிரியர் எஸ்.ஏ.உதயன்" என்ற பெருமைக்குரியவரான தாங்கள், இப்போது தேசிய படைப் பாளர்களின் வரிசையில் முன்னணியில் மதிக்கப்படுகின்ற நாவலாசிரியர்களின் வரிசைக்கு உயர்ந்துள்ளீர்கள் - உயர்த்தப் படுள்ளீர்கள் என்ற "காலத்தின் செய்தி" மிக மகிழ்ச்சிக்குரிய தாகும். தங்களுக்கு இவ்வளவு அனுபவ வாண்மை எப்படி ஏற்பட்டதாகும். அதற்கான பதில் தங்களின் "உ.பி 83" என்ற இந்த நாவலின் முகப்பில் அமைந்துள்ள தங்களின் உரையில் உள்ளடங்கியிருந்தது என்பதை இங்கு பதிவு செய்வது பொருத்தமாதெென எண்ணு கிறேன். பின்வருமாறு என்னால் வரையறை செய்து கூறமுடியும். "உதயனைப் போல் அனுபவம் பெற்றவர்கள் நமது மத்தியில் நிறைய உள்ளனர். ஆனால், பெற்றுக் கொண்ட அனுபவங்களைப் பதியம் வைத்துச் செழிப் பாக்கிப் பொருத்தமான வாய்க்காலில் வடிய விட்டத்தில் அவரே அவருக்கு நிகராகுகின்றார்"

மீண்டும் எனது நன்றிகளையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
கே.ஆர்.டேவிட்

எஸ்.டேவிட்




# உதயன் மண்பற்று மிக்கக் காத்திரமான – படைப்பாளி

"லோமியா" என்ற நெய்தல்நில வாடை கமழும் இந்த நவீனத்தின் படைப்பாளன் திரு.எஸ்.ஏ. உதயன் அவர்கள் வரலாற்றுப் பெருமை மிக்க மன்னார் மாவட்டத்தின் கலை இலக்கிய களத்தில் இளைய கலை இலக்கியவாதிகளின் முதன்மை நிலையில் வைத்து கணிக்கப்படத்தகுதியானவர். எனது நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான உதயனின் கலை இலக்கிய ஆளுமை பற்றியும் தனித்துவமான ஆற்றல்களைப் பற்றியும் நான் நன்கு தெரிந்து வைத்திருப்பவன் என்ற அடிப்படையில் இவரைப்பற்றிய அறிமுக முன்னோட்டத்தை உணர்வு பூர்வமாக வார்த்தை வரிகளில் உரிமையுடன் எழுத வேண்டிய தார்மீகக்கடப்பாடு எனக்கு உண்டு.

எமது மண்ணில் மூன்று தசாப்தங்களாக நிகழும் யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் கலை இலக்கிய பாரம்பரியங்களை உயிர்ப்புடன் தக்க வைத்துள்ள மன்னார் தீவில் அமைந் துள்ள பல பண்பாட்டு விழுமியங்களுக்கு உரித்தான பேசாலை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.எஸ்.ஏ. உதயன் அவர்கள் 23.01.1964இல் பிறந்தவர்.

திரு.எஸ்.ஆரோக்கியநாதர் யோண் கெனடி துரம் என்னும் இயற்பெயரைக் கொண்ட இவர், சமுதாயத் தளத்திலும் இலக்கியப் பரப்பிலும் "உதயா" என்ற செல்லப் பெயரால் நன்கு அறியப்பட்டவர். அதுவே இவரது இலக்கிய நாமமாகவும் அமைந்து விட்டது. தாம் கல்வி கற்ற பேசாலை மத்திய மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் திரு.உதயன் அவர்கள் பயிற்றப்பட்ட ஓவியத்துறை ஆசிரியர். தான் சார்ந்த சூழலிலிருந்து சர்வதேச பரப்பு வரை விசாலித்த மானிட வர்க்கத்தின் வரலாற்று இயங்கியல் நகர்வுகளையும் மாற்றங்களையும் சமகால நிகழ்வுகளையும் உணர்வு களையும் உறவுகளையும் முரண்பாடுகளையும் முன் னேற்றங்களையும் நிஜங்களையும் போலித்தனங் களையும் அநீதிகளையும் அடக்குமுறைகளையும் அறிவியல் ரீதியாகவும் கலைத்துவக் கண்ணோட்டத் துடனும் அலசி ஆராயும் நுண்திறன் படைத்த உதயனின் கலை இலக்கிய ஆளுமையும் ஆற்றல்களும் பல பரிமாணங்களைக் கொண்டவை.

இவர் ஓவியத்துறை ஆசிரியர் எனினும் நாடக அரங்கியல் துறையிலேயே இவரது நாட்டமும் நாமமும் பிரகாசமானதாக வெளித் தெரிகின்றது. நவீன நாடகங்கள், நாட்டுக்கூத்து, நகைச்சுவை நாடகங்கள், தெருக்கூத்து, சிறுவர் நாடகங்கள், வானொலி நாடகங்கள், சிறுகதைகள், திரைக்கதைகள் என்ற பலதுறை படைப்பாற்றல் திறன் படைத்த திரு.உதயன் அவர்கள் நீண்டகாலமாக தனது நெஞ்சாங்கூட்டுக்குள் உருண்டுகொண்டிருந்த தான் சார்ந்த சமுதாய வரலாற்றின் வெட்டுமுகம் ஒன்றை லோமியா என்ற நாவல் வடிவத்தில் துணிச்சலுடன் எழுதியுள்ளார். நாவல் எழுதும் முனைப்பில் இது இவரது கன்னி முயற்சியாகும். மேலும் மன்னாரில் அச்சுருவாக நூல் வடிவில் வெளிவரும் முதல் நாவலும் இதுவேயாகும்.

இதுவரை முப்பது நவீன நாடகங்களையும் நான்கு நாட்டுக்கூத்துக்களையும் நான்கு சிறுவர் நாடகங்களையும் ஆறு வானொலி நாடகங்களையும் ஏழு நகைச்சுவை நாடகங்களையும் ஒரு வீதி நாடகத்தையும் எழுதி அரங்கேற்றியுள்ள உதயன் அவர்கள் சிறந்த நடிகர், நாடகத்தயாரிப்பாளர், நெறியாளர், ஒப்பனைக் கலைஞர். இவரது பாடசாலை நாடகங்கள் சில வலய மாவட்ட மாகாண மட்டங்களில் பரிசு பெற்றுள்ளன. மேலும் சில நாடகங்கள் தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. திரு.உதயன் அவர்கள் தனது கலைத்துவ வாழ்வின் உருவாக்கத்தில் தனது தந்தையாரையும் குறிப்பிடத்தக்க சில கல்லூரி ஆசான் களையும் நன்றியுடன் நினைவு கூர்வதுடன் தனது அரங்கியல் துறையின் வளர்ச்சிக்குக் காத்திரமான வலிமையூட்டியவராக தமிழ்நாட்டின் நாடக அரங்கியல் துறை மேதையும் சுபமங்களா என்ற முற்போக்கு கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் அமரர் கோமல் சுவாமிநாதன் அவர்களை அடிக்கடி நன்றியுடனும்

பெருமையுடனும் நினைவு கூர்வார்.

புலம்பெயர் வாழ்வின்போது தமிழகத்தில் இவர் தங்கியிருந்த காலப்பகுதியில் சிறந்த தென்னிந்திய நாடக திரைப்படக் கலைஞர்களுடன் அறிமுகமாகி அவர்களுடன் இணைந்து செயற்படும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி அரங்கியல் திரைப்படத்துறை நுட்பங்களையறிந்து அவற்றின் அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டார். இவர் 1984ஆம் ஆண்டு சென்னை கலைவாணர் அரங்கில் மேடையேற்றிய "துயர இரவுகள்" எனும் நவீன நாட்டுக்கூத்து ஈழவரின் துயரை பறைசாற்றிய புதுப்படைப்பாகும். இக்கலை வெளிப்பாட்டிற்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் முன்னுரை வழங்கிச் சிறப்பித்தார்கள். எசேயு என்ற புனை பெயரில் மறைந்து நின்று இவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட மன்னார் மாவட்ட பத்திரிகையான காலநதியில் சிறுகதைகள், கட்டுரைகள் என்பனவற்றை யும் எழுதியுள்ளார். எமது தேசத்தில் போலியான சமாதானக் காற்று வீசிய மிக அண்மைய ஆண்டுகளில் காலநதி என்ற பத்திரிகையின் பிரதமப் பதிப்பாசிரியராக இருந்ததால் பல சவால்களுக்கும் சிரமங்களுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் மத்தியில் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக அதனை வெளியிட்ட பெருமைக்குரியவர். பொதுவாக ஒரு மனிதனின் சாதாரண வாழ்வுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்று கூறுவர். ஆனால் உதயனின் கலைத்துவ வாழ்வுக்கு பல பக்கங்கள் உண்டு என்பதை அவரை நன்கு அறிந்தவர் களுக்குத் தெரிந்த பட்டவர்த்தமான உண்மை யாகும். இதுபற்றி இவரது கல்லூரி வாழ்க்கையில் கலைத்துவ வளர்ச்சிக்கு வடிகாலமைத்த இவரது ஆசானும் பேசாலை மண்ணின் மூத்த கலைஞருமான கலா பூசணம் திரு.எஸ்.ஏ.மிராண்டா அவர்கள் அண்மையில் எழுதி வெளியிட்ட, "பேசாலை மண்ணின் பண்பாட்டு வேர்கள்" என்ற நூலில் உதயனின் கலைத்துவ ஆளுமை ஆற்றல்களைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

இயல்பான கலை இரசனையும் சுகமான சுதந்தர நடையும் நவரசங்கள் அனைத்தையும் ஒருங்கே திரட்டி எக்கதாபாத்திரத்தையும் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றலும் திறமையும் கலை வல்லமையும் பெற்ற சகலகலா வல்லவன் உதயன் எனப்படும் ஓவிய ஆசிரியன் திரு.எஸ்.ஏ.உதயன் துரம் அவர்கள் அற்புதமான குறியீட்டு நாடகங்களான அர்த்தமுள்ள அபஸ்வரம்; நம்ம வீட்டு ஆத்திசூடி, ஒரு மரணத்தின் விளிம்பில் என்பனவற்றை மேடையேற்றி ரசிகர்களுக்கு நல்விருந்து படைத்தார். எங்கும் எக்காளமாய் முழங்கும் இக்கலைஞனின் சங்கநாதம் என்ற நவீன நாட்டுக்கூத்து கலை உலகில் கொடிகட்டிப் பறந்தது. ஈடிணையில்லாத புகழைத் தமக்கே உரித்தாக்கிக் கொண்ட இக்கலைஞரின் நாடகப் படைப்புக்களும் மேற்கொண்ட நெறியாள்கையும் தேசிய விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளன.

உதயன் மண்பற்றுமிக்க காத்திரமான படைப்பிலக்கியவாதி இவரது பல படைப்புக்களில் சமுதாய அவலங்களையும் துயரங்களையும் போலித் தனங்களையும் அநீதிகளையும் அடக்குமுறைகளையும் தரிசிக்கலாம். உதயனின் சிந்தனைகளும் எழுத்துக் களும் அநீதிகளுக்கெதிராக எறியப்படும் குறிதவறாத வேல்கள் என நாக்குப்பிறழாமல் கூறமுடியும். தனக்காக வாழ வேண்டும் என்ற குறுகிய வட்டத்திற்கப்பால் தாம் பிறந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தன்னல மற்ற மனப்பாங்குடன் காலநேரம் பார்க்காது பசிதாகங் களைப் பொருட்படுத்தாது ஓடிஓடி சேவை செய்யும் பண்பியல்பு இவரிடம் இயல்பாக உண்டு. பேசாலையின் வெற்றி இன் ரிதம் எனும் இசைக்குழுவின் உருவாக்கத் தின் முன்னோடிகளில் இவர் முக்கியமானவர். உதயனின் பல்துறை ஆற்றல்களை ஊக்குவிக்கக்கூடிய காத்திரமான கலை இலக்கிய அமைப்புகளோ, ஊடக வசதிகளோ, களவாய்ப்புகளோ, பதிப்பகங்களோ மன்னாரில் பெரிதாக இல்லை என்றுதான் நான் கூறு வேன். இந்த மந்தமான இயங்கியல் நிலைமையினை பிளந்து எறிந்து கொண்டு உதயனின் இதய தாகங்கள் கலையிலக்கியத்துறையில் பல பரிமாணங்களில் பீறிட்டுச் சொரிவது ஆச்சரியமானது தான். இந்நிலை யில் உதயனின் நாவல் எழுதும் முனைப்பில் கன்னி வடிவமான, "லோமியா" என்ற இந்த நவீனத்தைப் பற்றி தேசிய மட்டத்திலும் புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் பல்வேறு ஊடகங்களிலும் பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்படவிருப்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கலாம்.



இவரது "லோமியா" என்ற இந்த நாவலுக்கு இலக்கிய வாசகர்கள் வழங்கும் உற்சாகமும் விமர்சனமும் ஆதரவும் இதுபோன்ற மேலும் பல நாவல்களை அவர் வெளிக் கொணர உந்துவிசையாக அமையும் என்பது எனது நம்பிக்கை. உதயனின் கலை இலக்கியப் பயணம் நிதானமாகவும் காத்திரமாகவும் சமுதாயப்பற்றுடனும் முன்னோக்கி நகர எனது நல்லாசிகள் உரித்தாகுக.

இலக்கிய வடிவங்களில் புனை கதை இலக்கியம்தான் நின்று பேசவல்லனவாக இருக்கின்றன. ஏனெனில் தமிழ் இலக்கியத்தின் செழுமையையும், ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் பண்பாட்டு யதார்த்த வாழ்வின் நடைமுறைகளையும் புனைகதை இலக்கியங்கள் மூலமாகத்தான் வெளிக் கொண்டு வர முடிகிறது. ஈழத்திலும் இதுபோன்ற புனை கதைகள் பல தமிழ் படைப்பாளிகள் மூலம் வெளிவந்திருக்குகின்றன. இவற்றில் கடந்த போர்க்காலத்தில் நிகழ்ந்தவைகளையும்.. போருக்கு பிற்பட்டதான வாழ்க்கை நிலையையும் ஏந்திக்கொண்டு புதிய நாவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. இந்த வகையிலேதான் எஸ்.ஏ. உதயனின் "சங்கு முள்ளு" என்ற நாவலை நாம் பார்க்கிறோம்.

இந்த நாவலானது கடந்து போன போர் களத்தில் இருந்து மீண்டு வந்து புதிய மீள்குடியேற்ற வாசிகளுக்குள் நடக்கின்ற வாழ்க்கை பிரச்சினைகளை சித்திரிப்பதாக காணப்படுகிறது.

மன்னார் சைபர் சிற்றி நிறுவனத்தால் வெளியீடு செய்யப்பட்டிருக்கும் இந்நாவல்

"அனைத்து யுத்தங்களிலும் அப்பாவிகளாய் உயிர் நீத்தவர்களுக்கு சமர்ப்பணம்" என்று இந்த நாவலை அறிமுகப்படுத்துகிறார் நாவலாசிரியர் எஸ்.ஏ. உதயன்.

சங்கு முள்ளு என்பது கடற்கரையில் ஒதுங்கும் ஒரு கடலுயிரியாகும். அந்த உயிரியலில் மேற்பரப்பு முழுவதிலும் கூர்மையான வலிதரக்கூடிய புண்களைக் கொண்டதாகும். அந்த முள்ளு நம்மீது விழுந்தாலும் நாம் முள்ளின்மீது விழுந்தாலும் குத்தும்.. குத்தினால் கொடிய வலியைக் தரும்.. அதுபோலவே இந்த நாவலில் உலாவருகின்றன பாத்திரங்களைப் படைத்திருக்கிறார் உதயன்.

இந்த நாவலின் மூலம் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ஒரு மீள்குடியேற்ற கிராமத்தில் நடந்ததாக ஆசிரியர் உதயன் அவர்கள் புதிதாக "சங்கு முள்ளு" நாவலிலே எழுதுகிறார்.

இந்நாவல் அவருடைய வழமையான கதைக் களத்தையும், எழுத்துப் போக்கையும் தாண்டி புதிய ஒரு எழுத்து வாண்மைக்குள் நம் கவனத்தை ஈர்க்கிறது. யதார்த்தப்பூர்வமான உயிர் துடிப்புள்ள கதாபாத்திரங்களை இந்த நாவலிலும் அவர் உலக விடுகிறார்.

நடந்து முடிந்த யுத்தத்தின் சுவடுகள் மாறாமல் இன்னும் உடலிலும் மனதிலும் அவற்றை சுமந்து கொண்டு திரிகின்ற மனிதர்கள் பற்றி பேசுகிறார். உண்மையில் தாம் பூர்வீகமாகவாழ்ந்த கிராமம் போரினால் சிதைந்து அழிந்து தூர்ந்து போனதற்கு பின்பு மீண்டும்அதே கிராமத்தை கொஞ்சம் கொஞ்சமாக புதிதாக கட்டுவதில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்களையும் மக்களின் மன ஓட்டத்தையும் நாவலின் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த நிலையில் உணர்ச்சி

# எஸ்.ஏ. உதயனின் "சங்கு முள்ளு" நாவல் ஒரு பார்வை..

- டிலானி-




பூர்வமான கதாபாத்திரங்களூடாக சில வாழ்வு நெறிமுறைகள் தடுமாறி மாற்றம் கண்டு போவதை ஆசிரியர் குறிப்பிடுகிறார. அகதி முகாம் வாழ்வில் முடக்கப்பட்டு புதிய சூழ்நிலைக்கு மக்கள் திரும்புகிற போது நவீன உலகின் நடைமுறைகள் சில ஆசைகளை தூண்டி மக்களை சீரழித்து விடுவதை நாம் காண் கிறோம். அந்த வகையிலேயே வதனி என்ற ஒரு பெண் பாத்திரம் வார்க்கப்பட்டுள்ளது. இதைப் போலவே முறையற்ற முரணான வாழ்க்கைக்குள் சூழ்நிலைகளின் நிமித்தம் தள்ளப்படுகின்ற ரஞ்சனியின் வாழ்க்கையும் நாவலில் காணப்படுகிறது. பிரச்சினைகளை எழுப்பு கின்ற ஆசிரியர் அவற்றுக்கான தீர்வுகளை யதார்த்த பூர்வமாக அணுகி இருப்பதை நாம் வாசிக் கிறோம். இதில் அன்னபூரணி என்ற ஒரு வயதான அம்மா, சங்கரப்பிள்ளை என்ற ஒரு ஊரின் பெரிய மனசுக்காரன், ஏரம்பு என்று சொல்லப்படுகிற ஒரு கூலித் தொழிலாளி, செந்தில் என்ற தடுப்பிலிருந்து வெளியே வருகின்ற ஒரு பழைய போராளி என்பவர்களை வைத்துக் கொண்டு கதையை மிக அழகாக பின்னிக்கொண்டு வருகிற எஸ்.ஏ. உதயன்.. முரளி என்ற ஒரு வில்லத்தனமான பாத்திரத்தையும் இங்கு அறிமுகம் செய்கிறார்.

நாவலாசிரியர் திரு எஸ். ஏ உதயன் இந்த நாவலை எழுதுவதற்காக அவர் குறிப்பிடும் ஒரு மீள் குடியேற்ற கிராமத்திலே சென்று தங்கி இருந்து அங்கிருந்த பலருடன் பேசி அங்குள்ள நடவடிக்கை களை ஆராய்ந்து எழுதியதாக சொல்லுகிறார்.

உதயனின் எள்ளளவும், அடைமொழிகளும், உஸ்மான் உவமேயங்களும் இந்நாவல் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. இவ்வாறான பிரச்சனைகள் அந்த கிராமத்திலும் சாதாரணமானது தான் இது போன்ற பிரச்சனைகள் வேறு புதிய முன்கூடியத்த கிராமங் களிலும் நடப்பதற்கு வாய்ப்பிருப்பதை சொல்லி அவர் எச்சரிக்கிறார் சமூகத்தின் பிரச்சினைகளை வளமை யாக கையில் எடுக்கும் இசை உதயன் இந்த நாவலிலும் அவ்வாறு சில பிரச்சினைகளை பேசி அதற்கு கதை போக்கிலேயே சில நியாயங்களையும் கற்பிக்கிறார். வாசாப்பு, சொடுதா, லோமியா போன்ற நாவல்களில் அவர் படைத்த கனதியான பாத்திரங்களில் இருந்து சங்குமுள்ளு பாத்திரங்கள் விலகி வேறொரு சூழலில் அதற்குரிய இசைவான வாழ்க்கை முறையில் மனித நீதியை போதிப்பதாகவே நாவல் அமைகிறது.






செங்கை ஆழியானைப்போல எஸ்.ஏ.உதயனும் கதைக்களத்தினை மாற்றும்போது அச்சூழலுக்குரிய நிகழ்வுகள் சம்பவங்களை உயிர்ப்பான சித்தரிப்பது பாராட்டுக்குரியது. ஒரு நெய்தல் மண்ணுக்கும் சொந்தக் காரரான நாவலாசிரியர் மருத மண்ணையும் ஆழமாக கதைப்பது ஆச்சரியப்படுத்துகிறது.

எஸ்.ஏ.உதயன் கடந்தகாலம் பதிவு எனும் போக்கை மாற்றி சமகால இலக்கியமாக இதனைப் படைத்திருக்கிறார்.

உடமைச்சமூகத்தின் இயல்பு மாற்றம் சூழ்நிலைக் கேற்ப எவ்வாறு மாறிவருகிறது என்பதையும் கவனப்படுத்துகிறார்.

ஆசிரியர் முடிவுகளை நெருங்கும் போது குறிப்பிடும் விவரணங்கள் சினிமாத்தனமாக மாறியிருப் பதையும் நாம் கவனிக்கிறோம்.

மரணவீட்டுச்சடங்குகள், கடைசிச் சண்டையின் கொடுமையான காட்சிகள் என்பவற்றை ஆசிரியர் தன்னுடைய எழுத்தாற்றலின் மூலம் விவரணப் படுத்துவது நாமும் அங்கு உயிரோடு உலவுவதான மனக்காட்சியாக உயிர்பெறுகிறது.

இது உதயனின் ஐந்தாவது நாவலாக வெளி வந்திருக்கிறது.

இந்த நாவல் வாசகர் மத்தியில் அடையும் போது சிறந்த நாவல் என பாராட்டப்படும் என்பதோடு இந்த நாவலும் உதயனின் படைப்பாற்றலுக்கு மகுடம் சூட்டும் என நான் நினைக்கிறேன்.

எஸ்.ஏ.உதயன்

# சாவு...

ரெண்டு காலையும் தரையில பரவினபடி முன்னால மடிஞ்சு செத்துக் கிடந்தான் சின்ராசு..

அவன் இடுப்பில கட்டின கயிறு நெஞ்சுக்கு ஏறி கழுத்து மட்டுக்கு இறுக்கினபடி கிடந்துது.

ஏரியா முகிலன் இத எதிர்பாக்கயில்ல..

"அடப் பயமுறுத்திறதுக்குத்தான கட்டிப் போட்டது.. சாவான் எண்டு யாரு கண்டா.."அவன் தலையச் சொறிஞ்சுகின்டு முழிக்கிறான்..

கொஞ்ச நேரத்தில சனம் அதில கூடிச்சிது..

"கயிறு இறுக்கிச் செத்துட்டான்"

"இப்பிடி விடிய விடிய பனியில கிடந்தா.. நினைச்சுப் போய் செத்துட்டான்.."

"ரா..ராவா சத்தம் போட்டுக்கின்டு கிடந்தான்.. அதான் நா வரண்டு செத்துட்டான்"

ஆக்கள் பலமாதிக் கதைக்கத் துவங்கிட்டுதுகள்.

"சே..அநியாயமா சாவடிச்சிட்டானுகளே.."

வெளியில சத்தமாச் சொல்ல சனம் பயப்பிடுது..

நேத்துப் பின்னேரம் ஆறுமணிக்கு சின்ராசுவ சாரத்தில புடிச்சு இழுத்துக்கின்டு வந்து இந்தப் போஸ்ட் மரத்துக்கிட்ட வைச்சு விசாரிச்சதையும் வெருட்டினதையும் இந்தச்சனம் பாத்துக்கின்டுதான் நின்டுது..

குடியும் வெறியும்.. ஆக்கினையென்டு அவன் பொஞ்சாதி சீவராணி குடுத்த முறைப்பாட்டுக்குத்தான் ஏரியாப் பொறுப்பாளர் முகிலன் இப்பிடிக் கடுப்பாநிக்கிறான் எண்டு சனம் கதைக்குது.

"சீவராணிக்கு இது ஆகாத வேல.. என்னதான் இருந்தாலும் புருசன இப்பிடி அடுத்தவனிட்டச் சொல்லிக்குடுத்து அடிக்கிறது நல்லாவா இருக்கு.."

ஹெல்ப்பர் ராசன்தான் சின்ராசு வுக்கு பனிஸ்மென்ட் குடுக்கணுமென்டு ஒத்தக்காலில நின்டான்..

இத்தனைக்கும் அவன் சீவராணிட தங்கச்சி புருசன்தான்.. அவன் தன்ர பொஞ்சாதிட அக்கா சீவராணி புள்ள இல்லாம இருக்காவென்டு இளக்காரமா கேட்டதுக்கு..

"என்ன மச்சான் செய்யிறது.. புருசன் சரியில்ல.. முடாக்குடிகாரன வைச்சு என்னத்தக் குடும்பம் நடத்திறது.. புள்ளப் பெறுறது" என்டு அவ மூக்குச்சிந்தி அழுகிறாவென்டு அவ கண்ணீர இவரு துடைக்கப் போய்த்தான் இவ்வளவு பிரச்சின..

ஊர்வழப்பம் தெரிஞ்ச ராசன் மாதி ஆக்கள் இயக்கத்துக்கு ஹெல்ப்பரா இருக்கிறது நல்லமென்ட மாதித் தான்.. அவனுகளுக்கு இயக்கத்தில கொஞ்சம் மரியாத.. அவனுக எதென்டாலும் கதைக்கு முந்திருவானுக. அவன்களிட கதையத்தான் இயக்கம் கேக்குமென்ட படியால சனத்துக்குப் பயம்.

ராசன் சொல்லுற கதையும் அப்பிடித்தான்.. ஏரியாப்பொறுப்பாளர் முகிலன் சின்னப் பொடியன்.. ராசன் சின்ராசுவப்பத்தி போட்டுக் குடுத்ததுக்கு "சரி.. ஆளப்புடிச்சு ரெண்டு தட்டுத் தட்டிவிடு" என்டுட்டான்.

விடிஞ்சா வருஷம்.. பின்னேரம் ஆறுமணிக்கு கோயிலில நன்றி வழிபாடு முடிஞ்சு சனம் வாற நேரம் சின்ராசு ரோட்டில் குடிச்சுப்போட்டு சத்தம் போட்டானென்டு புடிச்சு இழுத்துக்கின்டு வந்தான் ராசன்.

"ராசன்.. சீவராணி சொன்னா என்டதுக்காக.. இப்பிடி மரத்தில கட்டிப்போடுறது சரியில்ல.."

"என்ன இருந்தாலும் அவன் உன்ர சகலன்தான.."

பரிதாபப்பட்டு சொன்ன பொம்பிளைய "மூடிக்கின்டு போடி" என்டு ராசன் பல்லக் கடிச்சுக்கின்டு சொன்னது எரிச்சலா இருந்துது..

"ஞ்சே கேளுங்க... இவன இதில கட்டிப் போடுறம்.. ஆரும் அவுத்து விடக்கூடாது.. என்ன விளங்குதோ.." ஏரியாப்பொறுப்பாளர் முகிலன் கொஞ்சம் சத்தம் வைச்சு சொன்னான்..

ஏரியாவுக்கு மூள குறைவு.. ஒரு பொம்பிள சொன்னா என்டதுக்காக இப்பிடியா மனுசனக் கட்டிப்போட்டு.. வதைக்கிறது..

ஒரு பின்னேரத்தில சீவராணி ஏரியா முகிலனிட்ட முறப்பாடு சொல்லுறதுக்கு வந்தா.

"உன்ர பேரென்ன.."

"சீவராணி."

"சொல்லு என்னபிரச்சின" ஏரியாவுக்கு மருந்துக்கும் மரியாதை இல்லாத கத.

"குடிச்சுப்போட்டு வந்து ஒரே அட்டகாசம்.."

"என்னவாம்.."

"சந்தேகப்படுறான்.. ஐயோ.. கேக்காத கேள்வி.. ஒரே மாப்ள சாட்டுறதும் அடிக்கிறதும்.." ஏரியா அவள மேலும் கீழுமா ஒரு பார்வ பாத்துது...

மூக்குத்தியோட நின்டவளுக்கு தெத்துப்பல்.. கறுப்பா அகன்ட உதடும்.. கவர்ச்சியும்..

"நீ..அப்பிடியோ.."

"ஐயோ.."

சீவராணிக்கு பொதுக்கென்டு கண்ணீர் வந்துது.

பக்கத்தில இன்னொரு புலி நின்டு சிரிச்சுது..

சீவராணி வெக்கத்தில் நெளிஞ்சா..

"சரி..சரி..நீ போ.. நான் பாக்குறேன்."

அவள் போனப் பிறகு.. ஹெல்ப்பர் ராசன் விடுறாப்போல இல்ல..

நாலு வயசு குறைஞ்ச ஏரியாவ கொஞ்சங்கூட சுரணையில்லாம "அண்ணன்" போட்டுத்தான் கதைப் பான் ராசன்..

"சரியான அட்டகாசமண்ணன்.. பக்கத்து வீட்டில இருக்க ஏலாது.. கையில கிடைக்கிறத எடுத்து அடிப்பான்.. புடிக்கயும் ஏலாது.."

"ம்..ம்..அது சரி.. அவவுக்கு மாப்ள சாட்டுறானாம்.. உண்மையா.."

ராசன் பதறிக்கின்டு குழம்பினான்..

"சேச்ச.. அது சும்மா கதைக்கிற கத.."

ஏரியாட இடுப்பில் தொங்கின பிஸ்டல பாத்தான் ராசன்..

அவனுக்கு கண் பிதுங்கிச்சு..

கூப்பன் அரிசியெடுத்துக்கின்டு வந்த சீவராணிய மறிச்சு ராசன் கதைச்சான்..

"சீவராணி.. எப்பிடியும் சின்ராசுக்கு ரெண்டில ஒரு முடிவுதான் பயப்பிடாத.."

சீவராணி கீழ்க்கண்ணால ஒரு சாதியா அவனப் பாத்தாள்..

"ம்.. உம்மட வாசிக்குத்தான எல்லாம்.."

அவ சொல்ல இவரு இளிக்கிறாரு..

அன்டைக்கு நல்ல வாக்குப்போக்கா அம்புட்ட சின்ராசுவ இழுத்துக்கின்டு வந்து போஸ்ட் மரத்தில கட்டிப்போட்டு ஏரியாவிட்டச்சொன்னான்.. "அண்ணன்.. இப்பிடியே கிடக்கட்டும்.. அப்பதான் புத்தி வரும்.."

"ம்..ம்.. ஓம் வெறி முறிஞ்சாப்பிறகு அவுத்து விடு.. என்ன.."

"ஓமண்ணன்.."

ராவு முழுக்க தொண்ட கிழிய சத்தம் போட்டுக் கின்டு கிடந்த சின்ராசுவுக்கு வெறி முறிஞ்ச நேரம்.. பயம் வந்து ஒட்டிக்கின்டுது. அவனுக்கு தண்ணி தவிச்சுது.. நாக்கு அண்ணத்தோட ஒட்டிக்கின்டுது.. அவன் வெறியில உருண்டு புரண்டு அவதிப்பட்டதால இப்ப சரியான அசதியா இருந்துது.. கொர்லோன் கயித்தால இடுப்பில கட்டின கட்டு ஒருமாதி இளகி வயித்த தாண்டி நெஞ்சில வந்து இறுக்கிக் கிடந்துது.

இட்டுமுட்டா இருக்க..

சின்ராசு .. "யாராச்சும் வந்து அவுத்து விட மாட்டாங்களா.." என்டு ஏங்கினான்

அவன் இன்னும் உடம்பை நெளிச்சான்.. அவனிட கை ரெண்டையும் பின்னால இழுத்துக் கட்டின கட்டு கடுசா இருந்ததால அவனுக்கு ஒண்ணும் செய்ய ஏலாது. நாவரண்டு கடைவாயில நுரை தள்ளிச்சு..

"ச்சே.. இந்த ராசனென்ட வடுவா..புண்.... விடி யட்டும் நாளைக்கு செய்யுறன் வேல.." அவன் திட்டி னான்.. இவன் இல்லாத நேரத்தில வீட்டுக்கு ராசன் வந்து போறது துப்பரவா சின்ராசுக்குப் பிடிக்கயில்ல.. சீவ ராணிக்கும் கூடாத பழக்கம்.. ராசன் தங்கச்சி புருசன் தானென்டாலும்.. நாலுபேர் நாலு கத கதைக்க மாட்டாங் களா.. நாம என்னத்தையாவது சொல்லப்போனா.. நம்மளக் குடிகாரன் வெறிகாரன்.. உளம்புறான்.. என்டு வாய் அடைச்சிருறா.. அவ காட்டுற வாய்க்கு அடிச்சுக் கொல்லணுமென்டு ஆத்திரம் வருகிது..

இன்னும் கொஞ்சம் பிரயாசப்பட்டா நெஞ்சு மட்டும் வந்து கிடக்கிற கயித்த தலையால கழட்டி விட்டிரலாம்..

குதிகால நிலத்தில உந்தி தேகத்த அசைச்சான்... கயிறு கமக்கட்டத்தாண்டி மேலவரா தென்டது தெரிய அவன் மனசு கேவியழுதுது.

திரும்பவும் சீவராணியிட நினைப்பு வந்தது..

"அதான் நாம ஒழுங்கான ஆளா இருந்தா ஏன் இந்த வில்லங்கம்.. ஒரு வீட்டில ஆம்பிள சரியா இருந்தா ஏன் பொம்பிளை அடுத்தவனோட கதைக்கிறா..ச்சீ.." அவன் பாவப் பொறுத்தல் எடுக்கிறமாதி யோசிக்கிறான்.. "விடியட்டும் சீவராணிட்டயும் பொறுதி கேக்கணும்.. ஐஞ்சாறு வருசமும் நான் மனுசனா இருக்கையில்லயே.. விடிஞ்சாப்பொழுது பட்டா ஒரே குடியும் சண்டையும்.. ஆண்டவரே என்ன மன்னிச்சுக்கிள்ளும்.. நான் இனிமே குடிக்க மாட்டேன்.." சின்னராசு மன உறுதியோடு பிரதிக்கின எடுத்தான்..

சின்னராசுட உடம்பு முழுக்க வலியும் வருத்த மாவும் இருந்தாலும் அவன் மனசில ஒரு வெளிச்சம் படருற மாதி இருந்துது.

நாளையில இருந்து புது மனுசனா மாறணும்.. இவ்வளவு நாளும் செஞ்ச பாவத்துக்கு புலி தந்த இந்த தண்டனை சரிதான் என்றாகி மனம் சமாதானப்பட்டுக் கிடக்குது..

உடம்பு ஓய்ஞ்சு போய்ச்சு.. அரைக்கண் மூடி முனகிக்கின்டு கிடந்தவனில ஒரு திராணியுமில்ல.. விடியிறதுக்கு இன்னும் நேரம் கிடந்துது..

பக்கத்தில யாரோ வந்து நிக்கிற அசுவசுப்புத் தெரியுது.. இமையத்திறந்து பாக்க ஏலாமக்கிடந்தான்..

படக்கென்டு சின்ராசிட முகத்தில விழுந்த ஒரு பலமான கை.. அவனிட மூக்கையும் வாயையும் பொத்திப் பிடிக்க.. சின்ராசு திணறித் திமிருறான்..

அவனுக்கு யாரோ அவனக் கொல்லுறான் என்டது தெளிவாத் தெரிஞ்சுது..

அவனிட குரல்வளையும் நெறிபட காலை உதறி.. உதறி.. நீட்டின போது சீவன் போய்ட்டுது..

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



## திருமண அழைப்பிதழ் காட்சியறை

MATHI COLOURS



## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

**T.P: 021 2229285, 077 7222259**


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி து. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.